Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

'ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 30 | ஹேவிளம்பி சித்திரை 1957 ஏப்ரல் | இதழ் 4

படைத்தல்

ஆசிரியர்

இறைவனுக்கு முத்தொழில் உண்டு என்று எல்லாச் சமயங்களும் கூறுகின்றன. அவை யாவன : ஆக்கல், அளித்தல், அழித்தல் என்பன. இவைகளோடு மறைத்தல், அருளல் என்ற இரண்டும் சேர்ந்து ஐந்தொழில் உண்டு என்று சித்தாந்தம் கூறும். இவைகளில் ஒவ்வொரு தொழிலையும் இயற்றும்பொழுது ஒவ்வொரு பெயரால் இறைவன் குறிக்கப்படுகிறுன். ஆக்கல் நான்முகனுலும், அளித்தல் திருமாலானும், அழித்தல் உருத்திரனுலும் இயற்றப்படும். இறைவனே இம்மூன்று மூர்த்திகளாகவும் தொழிற் படுகிறுன் என்பது கருத்து.

இது நிற்க. ஆக்கல் அல்லது படைப்பு என்பது என்ன, அதனுடைய குணம் யாது என்பதைப் பற்றிப் பொது மக்கள் என்ன கருத்துக் கொண்டிருக்கிறுர்கள் என்பது கவனிக்கத்தக்க ஒரு செய்தி ஆகும். படித்தவனும் படியாதவனும் அறிவுள்ளவனும் அறியாதவனும் " இறைவன் என்னைப் படைத்தான், இறைவன் உலகைப் படைத்தான் " என்று கூறுகிறுர்கள். இச் சொற்களால் அவர்கள் 'என்ன கருத்தை வெளியிடுகிறுர்கள், நெஞ்சில் என்ன நினைக்கிறுர்கள்' என்பதைச் சற்று ஆராய்வோம். " இறைவன் என்னைப் படைத்தான் " என்னை என்ற சொல் தன் உடல் மட்டும் அல்ல, உயிரையும் சேர்த்துக் கூறுகிறுர்கள். உடல் ஒன்றுமட்டுமல்ல உயிரையும் இறைவன் படைத்தான்

என்றே சாதாரண மக்கள் எண்ணுகிறார்கள். இங்கே உயிர் என்றால் ஆன்மா என்றே கருதுகிறார்கள். உயிருள்ள உடலையும் ஆன்மாவையும் இறைவன் படைக்கிறான் என்பது பாமர மக்களின் கருத்து. இக்கருத்துக்கும் தங்கள் சமயநூற் கருத்துக்கும் வேறுபாடு உண்டு என்று அவர்களுக்குத் தெரியாது. இதைப் போலவே மற்ற சிற்றுயிர்களைப்பற்றிப் பேசும்போதும் அவைகளை இறைவன் படைத்தான் என்றால் உயிரையும் உடலையும் படைத்தான் என்றே கருதுவார்கள். இனி உலகைப் படைத்தான் என்றால் உலகில் உள்ள ஒவ்வொரு பொருளையும் அவ்வாறே உண்டு பண்ணினான் என்று நினைப்பார்கள். 'இறைவன் எல்லாம் வல்லவனாகையால் அவ்வாறு செய்ய வல்லவன் என்பது கருத்து. இது சரியா? சிறிது ஆராய்வோம்.

சைவர்களும் வைணவர்களும்கூட இவ்வாறே நினைக்கிறார்கள். இது மட்டுமா அத்துவைதிகளும் மற்ற வேதாந்திகளும் இவ்வாறே நினைக்கிறார்கள், பேசுகிறார்கள், இவர்கள் தங்கள் தங்கள் சமயக் கொள்கைகளை ஒரு சிறிதும் அறிந்து கொள்ளவில்லை, அறியமுயலவுமில்லை. பாமர மக்கள், படித்தவர்கள்கூட, ஆன்மா வேறு உடல் வேறு என்று எண்ணுவதே இல்லை. இறைவனே ஒவ்வொரு உயிரையும் உடலையும் உண்டாக்கினான் என்பது இவர்கள் கருத்து. நாடக மேடையிலும் 'இறைவன் என்னை ஏன் படைத்தான்' என்று பாடுகிறார்கள்.

சில நாள்களுக்கு முன் ஒரு சங்கத்து உல்லாச பவனத்தில் சில நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தேன். அவர்கள் வயது முதிர்ந்தவர்கள். நல்ல உலக அனுபவம் பெற்றவர்கள். கணக்கற்ற உபன்னியாசங்களைக் கேட்டவர்கள், நூல்களைப் பார்த்தவர்கள், அறநிலையத் தருமகர்த்தர்களாகவும் சேவை செய்தவர்கள், அப்படிப்பட்டவர்களில் ஒருவர் 'இறைவன் ஏன் ஒருவனைச் சிருட்டித்துக் கஷ்டப் படும்படி செய்கின்றான். அவனுடைய படைப்புச் செயல் திருவிளையாட்டு என்றால் இதனைச் செய்யாமலேயே இருக்கலாமே?'' என்றார். "மக்களை அதாவது அவர்களுடைய ஆன்மாக்களை இறைவனா சிருட்டிக்கிறார்?'' என்று கேட்டேன். 'பின் யார் சிருட்டிக்கின்றார், தாமே சிருட்டித்துக்கொள்ளுகின்றனவா?' என்று கேட்டார். "ஆன்மாக்

களும் அநாதி" என்றேன். "அப்படி எவ்வாறு இருக்கமுடியும், உலகில் எத்தனை ஆன்மாக்கள் இருக்கமுடியும்? ஆண்டுதோறும் இலட்சக்கணக்கில் பிறக்கின்றனவே! இவைகள் எப்போதும் இருந்தனவா? நம்பமுடியவில்லையே" என்றார்.

இந்த உரையாடலின் கருத்தைச் சிறிது ஆராய்வோம். இந்தப் பெரியார்கள் நமது சமயக் கொள்கைகளைச் சற்றும் புரிந்துகொள்ளவில்லை. உலகில் வழங்கும் சாதாரணப் பேச்சுக்கள், வழக்கச் சமயக் கொள்கைகள், பிறசமயக் கோட்பாடுகள் இவைகளை மட்டும் இவர்கள் அறிந்துள்ளார்கள். பொதுவாக கிறிஸ்தவ, இசுலாமிய, யூதச் சமயக் கருத்துக்களை அறிந்திருக்கிறார்கள். தமது சமயத்து மேன்மையான கொள்கைளை இவர்கள் அறியவில்லை எனத் தோன்றிற்று.

படைப்பைப்பற்றி யூதர்களுடைய மறையில் அடியிற் கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறது, 'ஆதியில் கடவுள் தனியாக ஒருவர் மட்டும் இருந்தார். வேறொன்றும் எங்கும் இருக்கவில்லை. அவர் முதலில் மண்ணையும் விண்ணையும் படைத்தார், மண்ணில் மனிதனைப் படைத்தார். மனிதனுடைய உபயோகத்திற்காக உயிர் வருக்கங்கள் தாவர வருக்கங்கள் முதலியவற்றைப் படைத்தார். இந்தப் படைப்பை ஆறுநாளில் செய்து ஏழாம் நாள் ஓய்வு எடுத்துக் கொண்டார்' என்பதாகும். அவர்கள் கொள்கைப்படி மனிதனுக்கு ஆன்மா உண்டு. அவன் செய்யும் நன்மை தீமைகளுக்குத் தக்கபடி சுவர்க்கம் நரகம் அனுபவிப்பான். மற்ற உயிர்களுக்கு ஆன்மா இல்லை. அவைகளை மனிதன் கொன்று தின்னலாம். அதில் பாவம் இல்லை. மேலும் கடவுள் எல்லாம் வல்லவர். அந்த ஆற்றலினாலே ஒன்றும் இல்லாததிலிருந்து ஆன்மாக்களையும் மற்ற உயிர்களையும் உலகையும் படைத்தார் என்பதாகும். உயிர்களுக்கு ஒரே பிறப்புத்தான் உண்டு. இறந்தால் செய்த வினைக்குத் தக்கபடி சொர்க்கமோ, நரகமோ உண்டு. இந்தக் கொள்கைகளையே கிறித்தவமும் இசுலாமும் பின்பற்றின.

நமது மக்களிடையும் இக்கொள்கையில் ஒரு பகுதி ஊன்றிவிட்டதுபோலும். பொதுவாக மறுபிறப்பு என்பது நமது மக்களுக்கு ஒப்புதல் உண்டு. மற்றப் பகுதியாகிய கடவுள் படைப்பில் யூதர் கொள்கைக்கும் நம்மில் பாமர

மக்களின் நம்பிக்கைக்கும் அதிக பேதம் இல்லை. கடவுள் ஆன்மாவையும், உயிர்களையும் உலகையும் படைத்தார் என்பதே அவர்களிடம் பரவியிருக்கும் கொள்கை. நமது பண்டைய சமயக் கொள்கையை அறியாத குற்றமே இதற்குக் காரணம்.

இறைவன் இருப்பது போலவே ஆன்மாவும் எப்போதும் இருக்கிறது. இனி உலகும் உண்டு என்பதை நமது மக்கள் தெரிந்துகொள்வதில்லை, 'என்று நீ, அன்று நான்.' என்ற தாயுமானர் சொல்லின் பொருள் நமது பாமர மக்கள் அறியவில்லை, ஆன்மாவை இறைவன் படைக்கவில்லை. உலகையும் படைக்கவில்லை. அழிவுக் காலத்தில் அதாவது பிரளயகாலத்தில் இவைகள் ஒடுங்கி இருக்கின்றன. படைப்புக் காலத்தில் இவைகள் மீண்டும் வெளிப்படுத்தப் படுகின்றன என்பதுதான் சித்தாந்தம். ஆகவே படைப்பு என்பதற்கு ஒடுங்கியிருப்பது வெளிவரல் என்பதுதான் பொருள். புதிதாக உண்டாக்கப்படுவதல்ல. ஒன்றும் இல்லாததிலிருந்து உண்டாவதல்ல. உலகைப் படைப்பதும் அதுவே ஆகும். உலகம் எப்போதும் உண்டு. ஒரு நிலையில் இருக்கும் அது மற்றொரு நிலைக்கு மாற்றப்படும். இந்த மாறுதலே படைப்பு ஆகும். ஐந்து பூதங்களாக உலகு அமைந்திருக்கிறது. இந்த ஐந்து பூதங்களின் வேறுபாடே படைப்பு ஆகும். அந்த வேறுபாட்டை நிகழ்த்துபவன் இறைவன். அத்தொழில்தான் படைத்தற்றொழில். இதுவே தற்கால விஞ்ஞானமும் கூறுகிறது. அதாவது உலகில் உள்ள பொருள்கள் அழிவதில்லை, ஒரு பொருள் மற்றொன்றாக மாறுகிறது என்பதே அதன் முடிவு. ஆகவே சித்தாந்தத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் வேறுபாடு இல்லை.

இதனால் என்ன அறிகிறோம். 'இறைவன் என்னைப் படைத்தான்' என்று நாம் பொதுவாகக் கூறும் பேச்சு பொருளற்றது, உண்மையற்றது என்பதாகும். இறைவன் (பதி), பசுஉயிர் (ஆன்மா) உலகு (பாசம்) எல்லாம் எப்போதும் உள்ளவை. இதனைச் சித்தாந்தம் 'முப்பொருள் உண்மை' அல்லது 'சத்காரிய வாதம்' என்று கூறும். பிற மதங்களுக்கும் நமது சமயத்திற்கும் உள்ள வேறுபாட்டை நமது மக்கள் தெளிவாக அறியவேண்டியது அவசியம் அல்லவா?

——

இயற்கையின் வளர்ச்சியும், இலக்கிய வளர்ச்சியும்

புலவர் - முருகவேள், பி. ஓ. எல்.

இந்நில வுலகம் தோன்றி ஏறத்தாழ 200 கோடி ஆண்டுகள் ஆகியிருத்தல் கூடும் என அறிவியல் அறிஞர்கள் கருதுகின்றனர். இவ்விருநூறுகோடி ஆண்டுகளில், உலக இயற்கையில், நிகழ்ந்து வந்துள்ள பெருமாறுதல்களும் வளர்ச்சிகளும் பலப்பல. அவைகளைப் பற்றி நிலநூல் (Geology), மனித நூல் (Anthropology), தொன்மை நூல் (Archaeology), இனநூல் (Ethnology), உயிர் நூல் (Biology). முதலிய துறைகளில் வல்ல பேரறிஞர்கள் விரிவாக ஆராய்ந்து விளக்கிவருகின்றனர். சிறப்பாக, சார்லஸ் டார்வின் என்பவருடைய "கூர்தல் முறைக் கொள்கை"யினை (Theory of Evolution) அறிந்தவர்கள் எவரும், உலகமானது பண்டை நாளில் இருந்த நிலைகளைவிட, எத்துணையோ வகைகளில் இன்று சிறப்புற வளர்ந்து முன்னேறி வருகின்றது என்பதனை வலியுறுத்திப் பேசுவர்.

இக் "கூர்தல் முறைக் கொள்கை" பற்றிய குறிப்புக்கள், "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி......எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்" என்னும் திருவாசகப் பகுதியிலும், "ஒன்றறிவதுவே உற்றறிவதுவே..." எனத் தொடங்கும் தொல்காப்பிய மரபியற் சூத்திரங்களினும் (27—33) எத்துணையோ பல நூற்றாண்டுகட்கு முன்னரே சுட்டப்பட்டிருப்பதனை நாம் காண்கின்றோம். எச்.ஜி. வெல்ஸ்* என்னும் அறிஞர் கூறுவதுபோல, வெறும் உடலமைப்பு ஒப்புமையை மட்டுமே ஆராய்ந்து, உயிர்வகைகளின் தோற்றம் பற்றி மேலைநாட்டறிஞர்கள் விளக்குகின்றனர். ஆனால் நம் பழம் பெருஞ் சான்றோர்களோ, உயிர் வகைகளின் தோற்றத்தினை அவற்றின் அறிவுநிலை வளர்ச்சிகளைக்கொண்டு சுட்டிக் காட்டி உணர்த்தியிருப்பது, "வியத்தொறும் வியத்தொறும்

---

*"......Their classification was based originally upon anatomical resemblances and took no account of any mental qualities." —*H. G. Wells*

வியப்பிறந் தன்றே" எனத்தகும் பெருமையினதாய்ப் பிறங்குகின்றது.

இஃது எங்ஙனமாயினும், மனித நாகரிகமும் அறிவும் படிப்படியே முன்னேறி வளர்ந்து வருகின்றன என்னும் உண்மைக்கு, இந்நாளில் மிகப் பலவாகப் பெருகிவரும் புதிய புதிய அறிவியற் காட்சிகளும் படைப்புக்களும் பெரிதும் சான்று பகர்கின்றன என்பதில் ஐயமில்லை. பண்டு குகைகளில் வாழ்ந்த மனிதன், இன்று பல அடுக்கு மாட மாளிகைகளில் வாழ்கின்றான். முன்னாளில் தழைகளையும் மரவுரிகளையுமே கொண்டு உடலை மறைத்து வந்த மனிதன், இந்நாளிற் பட்டும் துகிலும் பகட்டாக அணிந்து இன்புறுகின்றான். கட்டை வண்டிகளில் நத்தைபோல ஊர்ந்து சென்ற மனிதனின் பழங்கால நிலைக்கும், ‘வானவூர்தியில் மிக விரைந்து பறந்து செல்லும் புதிய நாகரிக மனிதனின் நிலைக்கும் உள்ள வேற்றுமை சாலவும் பெரியதொன்றாகும். இன்னோரன்ன துறைகளிலெல்லாம் முன்னைய நிலைமை தாழ்ந்ததாகவும், பின்னைய நிலைமை சிறந்துயர்ந்ததாகவும் காணப்படுகின்றது.

இந்த அடிப்படையில் அமைந்த "கூர்தல் முறைக் கொள்கை"யின்படி நோக்கினால், இலக்கியங்களுள் முன்னே தோன்றியவை சிறப்பில்லாதனவாகவும், பின்னே எழுந்தவை சிறப்புடையனவாகவும் இருத்தல்வேண்டும்! ஆனால் நாம் காண்பது என்ன? நேர்மாறான—தலைகீழான நிலை!* "இங்கே ஒரு வியத்தகு தன்மை யுள்ளது. இலக்கியத்தின் ஒவ்வொரு துறையிலும் தலைசிறந்த பெருநூல்கள் முதன்முதலாகவே வருகின்றன; எதிர்பாராத நிலையில் தடுமென வருகின்றன; பின்னர் ஒருபோதும் அவைகள் திரும்ப வருவதே இல்லை! ‘கூர்தல் முறைக் கொள்கை’யை

---

*"Here is a very odd thing. In literature the best in each kind comes first, comes suddenly and never comes again. This is a disturbing, uncomfortable, unacceptable idea to people who take their doctrine of evolution over-simply. But I think it must be admitted to be true. Of the very greatest things in each sort of literature, the masterpiece is unprecedented, unique, never challenged or approached henceforth." —*Dr. I. A. Richards*

அளவுக்குமேற் பெரிதும் உறுதியாக எண்ணிக்கொண்டு இருப்பவர்கட்கு, இக்கருத்து மயக்கம் விளைவிப்பதாய்-இன்பம் நல்காததாய் - உடன்பாடிலதாய் இருக்கும்! ஆயினும், இக்கருத்து உண்மையானது என்றே ஏற்றுக்கொள்ளப் படல்வேண்டும்! இலக்கியங்களுள் ஒவ்வொரு துறையிலும், மிகவும் பெருமை வாய்ந்தனவாகத் திகழ்வனவற்றுள்ளே தலைசிறந்து நிற்கும் பேரிலக்கியமானது, தானே முதற்கண் தோன்றும்; ஈடும் எடுப்பும் இன்றி விளங்கும்; இனி எப்போதும் தனக்கு ஒப்பாகவோ அன்றி அணுக்கமாகவோ பிறிதெதுவும் நெருங்கமுடியாத நிலையில் சுடர்விட்டு ஒளிரும்'' என, இயற்கையின் வளர்ச்சிக்கும் இலக்கியங்களின் வளர்ச்சிக்கும் இடையே உள்ள வேற்றுமையினை, டாக்டர் ஐ. ஏ. ரிச்சர்ட்ஸ் என்னும் ஆசிரியர் ஆராய்ந்து கூறி, இலக்கியங்களின் சிறப்பு இத்தகையது எனத் தெருட்டுகின்றார்.

அவர்தம் கூற்றின் உண்மை, தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம், திருவாசகம், திருக்கோவையார், திருமந்திரம், பெரிய புராணம், சிவஞானபோதம், சிவஞானசித்தியார் என்பனபோன்ற தலைசிறந்த - முழுமணி யனைய - விழுமிய சைவத் தமிழ்ப் பேரிலக்கியங்களுக்குப் பெரிதும் பொருந்துவதொன்றாகக் காணப்படுகின்றது. இப் பேரிலக்கியங்களுக்கு ஈடாக இனி ஒருபோதும் இத்தகைய வேறு நூல்கள் தோன்றுதல் இயலாது என்பது திண்ணம். எனவே, ஒப்புயர்வற்ற இத்தெய்விகச் செந்தமிழ் நூல்களை நாம் திறந்தெரிந்து கற்றுத் தெளிந்து, சிறந்த பயன்களை அடைய முனைந்து முயலுவோமாக!

இன்றைய சமயப் பணி

வித்துவான் - அ. நடேச முதலியார்

(மலர்-30; இதழ் - 3; 96-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏன் இந்த நிலை? இன்றைய உலகம் இளைஞர்களைப் பல துறைகளில் கவர்ந்து, சமய உண்மைகளை நினைக்கக் கூடச் செய்ய ஒட்டாமல் தடுக்கிறது. அதனால், நம் இளைஞர்களே சமயத்தைப்பற்றி இழிவாகவும், சமய உண்மைகளைப் பொய்யாகவும், சமய வாழ்க்கையைத் தாழ்வாகவும் வஞ்சகமாகவும் நினைக்கின்றனர். அங்ஙனம் நினைக்கவும் தூண்டு

கின்றனர் பிறர். பல சமயங்களில் எது உண்மை ? எது நம்முடையது ? எந்த உண்மையின் நம் வாழ்வு மலரும் என்ற எண்ணம் உண்டாக இளைஞர்கட்கு வாய்ப்பே இல்லை. பிற சமயத்தினர் இளமையிலேயே, குடும்பக் கல்வியாக, நம்பிக்கையின்மூலம், இளைஞர்கட்கு வீட்டிலேயே சமய உண்மைகளை ஓரளவு போதிக்கிறார்கள். பெற்றோர்கட்கு இருக்கும் சமயப் பற்றுக்கேற்ப அந்த இளைஞர்கட்கும் சமய அறிவு ஓரளவு பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. ஆனால், நம் சமயத்திலோ பெற்றோர்கட்கும் சமய அறிவு கிடையாது என்றே சொல்லலாம். ஆகையால், நம் சமய இளைஞர் வீட்டில் சமய அறிவைப் பெறுவது முடியாத செயலாய்விட்டது. ஆகையால் சமயப் பற்றுடையோரே நம் இளைஞர்க்குச் சமய அறிவைப் புகட்டவேண்டிய பொறுப்புடையவர்களாகிறார்கள். வருங்காலத்தில், நம் சைவ சமயம் உலகப் பெருஞ் சமயங்களில் ஒன்றாக நிலை நிற்க வேண்டுமானால், கொள்கையினால் மட்டுமன்றி அதன் தொண்டினாலும் சிறப்படையவேண்டியிருக்கிறது. அதற்கு என்ன செய்வது ? அஃது இன்று நாம் மேற்கொள்ள வேண்டிய பணியன்றோ ?

சமயப் பணி : சமயத்துக்குச் செய்யும் பணி அல்லது தொண்டு என்று பொருள்படும். ஒரு காலத்தில் கொள்கையினால் உயர்வை நாட்டவேண்டி யிருந்தது. அன்றைக்குச் சமய வாதங்களும் நடந்தன. இன்று, உண்டு என்று சொல்லும் சமயமனைத்தும் ஒன்றெனக் காணும் சமரச நிலை வேண்டும் என்ற கொள்கை வலுப்பட்டது. காரணம் சமயப்பூசல், பல போர்களை எழுப்பின. சமய வேற்றுமை சமுதாய வேற்றுமையாக உருவெடுத்தது. அதனால், சமயங்கள் எந்த அமைதியையும் பொறுமையையும், சகிப்புத் தன்மையையும் தரவேண்டுமோ, அதற்கு மாறாகப் பூசலையும், வேற்றுமையையும் வளர்த்தன. அதனால், சமயப் பூசல் நீங்க, உண்டென்ற கொள்கையுடையார் அனைவரும் ஒன்று என்ற சமரசநிலை ஏற்படவேண்டியதாயிற்று. அங்ஙனம் சமரசம் காணும்போதே தத்தம் சமயநிலை யறிந்து அதன்கண் பற்றுடையனாய், அதன்வழி ஒழுகிப் பிறரையும், நேசித்துப் பிறரும் தன்னை நேசிக்கும்படி வாழக் கூடியவனாய் வளரவேண்டிய காலம் இதுவாயிற்று.

இன்றைக்குச் சமயப் பிரசாரம் எப்படி நிகழவேண்டும்? சமயப் பிரசாரம் கொள்கைகளை எடுத்தியம்பும் அம் மாத்திரத்தில் நிற்கக்கூடாது. பல சமய உண்மைகளைக் காட்டி நம் சைவ சமயத்தின் மேன்மையினைச் சொல்லளவால் நிலைநிறுத்தும் அம்மாத்திரத்தில் சமயப் பிரசாரம் நிற்கக்கூடாது. சமய குரவர்களையும், நாயன்மார்களையும் எடுத்துக்கூறிச் சமய உண்மைகளை நிலைநாட்ட முயலுவதாக மாத்திரம் சமயப் பிரசாரம் அமையக்கூடாது. இன்றைக்கும் சிலர் அங்ஙனமே பிற சமய மறுப்பும், நாத்திகக் கண்டனமும் கூறிச் சமயப் பிரசாரம் என்பதாக அமைத்துக் கொண்டு வருகின்றனர். அது காலத்துக்கேற்ற சமயப் பிரசாரம் ஆகாது. பிற சமயச் சூழலால், தாக்குண்ட போது, பிற சமய ஆக்கிரமிப்பால் சமயம் குன்றின காலத்து, அத்தகைய சமயப் பிரசாரம் வேண்டியிருந்திருக்கலாம். இன்றைக்கு இளைஞர்களையும் பிறரையும், விஞ்ஞான விபரீத உலகம் கவர்ந்திருக்கிறது. ஒழுக்கத்துக்கு உயர்வில்லை. இந்நிலையில் எத்தகைய சமயப்பணி வேண்டும் என்பதே பெரிய கேள்வி. "இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே, ஒழுக்கம் உடையார் வாய்ச்சொல்" என்ற வள்ளுவர் வாக்கின்படி வாழ்வில் ஒழுக்கம் குன்றித் தலைதடுமாறும் இந்நிலையில், ஒழுக்கமுடையாராய்ச் சமயநெறி நிற்கும் சான்றோர், சமய உண்மைகளை எடுத்துக்கூறித் தம் வாழ்வினாலும் இளைஞர்களைக் கவரவேண்டும். உருகி உருகி நெக்கு நெக்கு உள்ளுடைந்து கசிந்திட்டு அகம்பூறும் உழுவலன்பிற் பழஅடியார்களாய்ச் சமயப் பிரசாரகர் மலிய வேண்டும். வேடமும் நீறும் விளங்க நிறுத்தும் நல்லடியார் சமயப் பிரசாரகர்களாய் வெளிவரவேண்டும். ஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் சமயப்பணி பூண்டபோது, எங்ஙனம் அடியார் கூட்டம் சூழ நாடுமுழுதும் சமயப் பிரசாரம்செய்தனரோ அங்ஙனமே, நல்லன்பர் பலராய்க்கூடி, ஒழுக்கந் தலைநின்று அன்பினோடும், இன்சொல்லோடும், ஆலயக்கூட்டு வழிபாடு நடத்திச் சமயப் பிரசாரம் தொடங்கவேண்டும்.

நம் நாடு சிறு சிறு கிராமங்களையுடையது. சில பெரிய நகரங்களும் உள்ளன. கிராமங்களிலும், நகரங்களிலும், இன்று சமயப் பணிக்கென்று என்ன ஒரு முறையான தொண்டு நடைபெறுகிறது. இல்லை என்றே சொல்லலாம்.

அதற்கு, அந்த அந்தக் கிராமத்திலும், ஒருவர் இருவரைத் தேர்ந்தெடுத்து, அக்கிராம மக்களுக்கும் இளைஞர்கட்கும், கூட்டு வழிபாட்டினையும், ஆலய வழிபாட்டினையும், செய்து வைத்துச் சமய உண்மைகளையும், ஒழுக்கத்தின் உயர்வினையும், நாட்டுப்பற்று மொழிப்பற்றோடு கூட்டி எடுத்தியம்ப ஏற்பாடு செய்யவேண்டும்.

சமயப்பணி மேற்கொள்வோர்க்குச் சமுதாயத்தின் நெருங்கிய தொடர்பு இருக்கவேண்டும். பொதுமக்கள், அவரை நம்மவர், நமக்கினியர், நமக்கு நல்லன கூறி, நல்லன செய்பவர் என்று எண்ணும்படி அவர் நடக்க வேண்டும். அவரைக் கண்டு அவர் படித்தவர், நம்மை மதிக்கமாட்டார். அவரை அழைப்பதெப்படி? என்று அஞ்சும்படி இருத்தல் கூடாது. வலிந்து சென்று நன்மை செய்யக்கூடிய, சொல்லக்கூடிய அருளுள்ளம் உடையவர்களாய்ச் சமயப் பிரசாரகர் விளங்கவேண்டும்.

இத்தகைய நிலை உண்டாவதற்கு என்ன செய்வது? நம் சமாஜமும், மடங்களும், பெரிய திருக்கோயில்களும், அறநிலையப் பாதுகாப்பினரும், சமயப் பிரசாரகர்களை உண்டாக்கவேண்டும். ஒழுக்கமுடையராய், சமயப் பற்றுடையராய் உள்ள இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து அவர்கட்கு, சமய நூல்களையும், பிரசார முறையினையும், வழிபாட்டு முறையினையும் முறையாகக் கற்றுக்கொடுத்து அவர்கட்கு வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகளையும் செய்துகொடுத்து அவர்களை நல்ல பேச்சாளர்களாகவும், நல்ல செயலாளர்களாகவும், நல்ல தொண்டர்களாகவும் ஆக்கிச் சமுதாயத்துக்குச் சமயப் பணியில் ஈடுபடுத்த முன்வரவேண்டும்.

சிவப்பிரகாசர் செய்யுள் நயம்

வித்துவான் மு. அருணசலம் பிள்ளை,

தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

கற்றுவல்ல புலவர்களால் கற்பனைக் கருவூலம் எனப் பாராட்டப்பெறும் சிவப்பிரகாச அடிகளார் இயற்றியருளிய நூல்கள் பல. அவையனைத்தும், சொன்னயம் பொருணயம் இலக்கண அமைதி தருக்கமுறை சமயக் கருத்து அணிநலம்

ஆகிய நுட்பங்கள் தொட்ட தொட்ட இடந்தொறும் செறி யப்பெற்று ஆராய்ந்து படிப்போர்க்கு அளவிலா இன்பம் பயப்பனவாகும். அவற்றுட் சில செய்யுட்களை எடுத்துக் காட்டாக ஈண்டுக் காண்போம்.

வனவசை மாநகரைத் தலைநகராகக் கொண்டு விளவல தேயத்தை ஆண்டுவந்த மமகாரன் என்னும் பேரரசனும், அவன் பட்டத்து மனைவியாகிய மோகினி யென்னும் அரச மாதேவியும் நெடுங்காலம் மகப்பேறின்றி வருந்தி உமை யம்மையைக் குறித்துச் செய்த அரிய நோன்பின் பயனாக ஒரு பெண் மகவைப் பெற்றனர். அம்மகவினை அரசமாதேவி அன்போடு வளர்த்த முறை பற்றிப் பிரபுலிங்க லீலையிற் கூறுமிடத்து, " மிடியன் ஒருசெய் யாளன்அச்செய் விளை யக் காக்கும் செயல்போலப், படியில் கல்வி விரும்பினோன் பாடம் போற்று மதுபோல, ஒடிவில் செங்கோல் மனுவேந் தன் உலகம் புரக்கு முறைபோலக், கொடிய நோன்பு செய் தீன்ற கொடியை வளர்த்தாள் மோகினியே " என்ற செய் யுள் உள்ளது.

இதன்கண் அரசமாதேவி தான் பயந்த அருமந்த மகவைப் பேணி வளர்த்த பெற்றியினை அடிகளார் மூன்று உவமைகளால் விளக்குகின்றார். இவற்றுள் முதல் உவமை " வறிஞன் ஓம்புமோர், செய்யெனக் காத்தினி தரசு செய் கின்றான் " என்ற கம்பர் வாக்கையும், மூன்றும் உவமை " காவல் குழவி கொள்பவரின் ஓம்புமதி " என்ற நரிவெரூஉத் தலையார் பாடற் பகுதியையும் நினைவூட்டுன்றன. கம்பர் தசரதனது ஆட்சிச் சிறப்பைப் புலப்படுத்தற்கு எடுத் தாண்ட கருத்து, இங்கு அரசமாதேவி தன் அருமை மகவை வளர்த்த முறைமைக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. நரிவெரூஉத்தலையார் 'குழந்தையை வளர்ப்பவர்போல உலகத்தைக் காப்பாயாக' என ஓரரசனுக்குச் செவியறி வுறுத்தினர். ஈண்டு நம் அடிகளார் வேந்தன் உலகம் புரக் கும் முறைபோல அரசமாதேவி மகவை வளர்த்தாளென அதனையே மாற்றிக் கூறியுள்ளார். இங்ஙனம் புலவர் பெரு மக்கள் ஓர் அரிய கருத்தினை இடத்திற்கேற்றவாறு அமைத் துக்கூறும் முறை பாராட்டற்குரியது. இது நிற்க.

அரசமாதேவி தன் மகவினை வளர்த்த முறையை விளக்குதற்கு மூன்று உவமைகள் கூறவேண்டுமா? கூறின்

அவை ஒன்றற்கொன்று வேறுபாடும் பொருட் சிறப்பும் உடையனவாதல் வேண்டுமன்றோ? போற்றி வளர்த்த லாகிய பொதுத்தன்மை யொன்றே பற்றிவந்த இவற்றாற் பெறப்படும் பொருள்நயம் என்ன? என்பவை ஈண்டுச் சிந்தித்தற்குரியன.

இவற்றுள், முதலாவதாகக் கூறப்பட்டிருக்கும் உவமை, "மிடியன் ஒரு செய்யாளன் அச்செய் விளையக் காக்கும் செயல்போல......கொடிய நோன்பு செய்தீன்ற கொடியை வளர்த்தாள் மோகினி" என்பது. இதன் பொருத்தத்தை நோக்குவோம்.

வறுமையால் வாட்டமுற்று வருந்திய ஒருவன், நெடு நாள் முயன்று ஈட்டிய பொருள்கொண்டு தனது ஆகூழ் வசத்தால் ஒரு சிறு நன்செய் வாங்கினனாயின், அதன்கட் பயிர்செய்து விளைவிற் பங்கு பெறுதற்குப் பலர் விரும்பி னும், அச்செய்யினை அவர்கள்பால் விட்டிராது, உட லூரமும் பயிர்த்தொழிலில் உள்ளக் கிளர்ச்சியும் உடைய அவன், அதன்கண் விளையும் பயன் முழுதுந் தானே கொள் ளக் கருதி, உழுதல் எருப்பெய்தல் களைகட்டல் நீர்கால் யாத்தல் காத்தல் ஆகிய தொழில்கள் அனைத்தையும் தானே முயன்று செய்தல் உலகியலிற் காணப்படுவது. அதுபோல, அரசமாதேவியும் பிள்ளையால் மிடிமைப்பட்டு நெடுங்காலம் வருந்தி உமையம்மையைக் குறித்துச் செய்த அரிய நோன் பின் பயனாக ஒருமகப் பெற்றாள். அச்செல்வமகளை வளர்த் தற்குச் செவிலித் தாயர் பலர் இருப்பினும் அவர்கள்பால் விட்டுத்தான் வாளாவிருக்க மனமொருப்படாமல், உடற் கின்பம் செவிக்கின்பம் முதலான ஐம்புல இன்பங்களும் ஆரத்துய்க்கும் ஆர்வமேலீட்டால், பாலூட்டல் நீராட்டல் பூசுவன பூண்பன புனைந்துகாண்டல் தாலாட்டல் முதலிய செயல்கள் அனைத்தையும் தானே செய்து மகிழ்ந்தாளாத லின், இங்ஙனம் வளர்த்த முறையை விளக்குதற்கு இவ் வுவமை கூறியது மிகப் பொருத்தமாகும்.

இனி இரண்டாவது, "படியில் கல்வி விரும்பினோன் பாடம் போற்றுமதுபோல......வளர்த்தாள்" என்பது. இதன் பொருள்: ஒப்பற்ற கல்வியை விரும்பிய மாணாக்க னொருவன் மூல பாடங்களை மறவாமற் பாதுகாத்தல்போல, மோகினி மகவை வளர்த்தாள் என்பதாம்.

ஒப்பற்ற கல்வி விருப்பமாவது, தனக்கு ஒத்தாரும் மிக்காரும் இல்லாராகத் தான் ஒருவனே கல்வியில் உயர்ந் தோனுதல் வேண்டுமென விரும்புதலாகும். இவ்விருப்ப முடையானுக்குப் பாடம் போற்றல் ஒன்றே சிறந்த கருவி யாகுமோ எனின், ஆகாது. வேறு என்னையெனின், 'பாடம் போற்றல்' என்னும் இத்தொடர்மொழி, கல்வி பயிலும் ஒருவன் கடைப்பிடிக்க வேண்டுவன வெல்லாம் தொகுத்துக் கூறியதொரு நூற்பாவினின்றும் எடுத்துக் கொள்ளப்பட்டதாகலின், 'ஒருமொழி யொழிதன் இனங் கொளற் குரித்தே' என்னும் விதியால், அதன் இனமாக ஓதப்பெற்றவையனைத்தும் ஈண்டுக்கொள்ளுதல் அமையும். அவை :—

" நூல்பயில் இயல்பே நுவலின்வழக் கறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசாற் சார்ந்தவை அமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினுதல் வினயவை விடுத்தல் "

என்பனவாம். இவை யெல்லாவற்றுள்ளும் பாடம் போற் றல் முதன்மையானதாகலின் அஃது ஈண்டு எடுத்தோதப் பட்டது.

இதனுல், பாடம் போற்றுதலுடன், உலகியலை ஆராய்ந் தறிதலும், ஆசிரியன்பாற் கேட்ட பொருள்களை மறவாது சிந்தித்தலும், மீண்டும் மீண்டும் ஆசிரியனை யடுத்து அப் பொருள்களை ஐயமறக் கேட்டுத் தெளிதலும், கல்வி யாளரொடு பழகுதலும், தான் ஐயுற்ற பொருளை அவர்பால் வினுதலும், அவர் வினயவற்றிற்குத் தான் மறுமொழி கொடுத்தலும், இவைபோல்வனவும் படியில் கல்வி விரும்பி னேன் கடைப்பிடித்தொழுக வேண்டுவனவாகும். அவ் வாறே மோகினியும், முன்னர்க் கூறியவாறு அக்குழந்தை யின் வளர்ச்சிக்கு ஆவன அனைத்தும் தானே முயன்று செய்து வந்ததனேடமையாது—தன் அரும்பெறன் மகவை ஏனையோரைக் காட்டினும் சிறந்த முறையில் வளர்த்தல் வேண்டுமென்னும் வேட்கை மிகப் பெற்றுளாதலின், பருவ மாற்றங்கள், உண்டி வேறுபாடு முதலிய காரணங்களால் ஒரோவழிச் சிறுநோய் தோன்றினும் அதனைச் சிறிதும் பொருளாய்ச், செம்முது செவிலியர் நன்மருத்துவர் ஆகி

யோர்பால் அந்நோய்க் கூறுகளை அடுத்தடுத்து எடுத்துக் கூறி நோய் நீக்கத்திற்காவன கேட்டலும், அவர்கள் கூறுவனவற்றை ஐயமறக் கேட்டுத் தெளிந்து அவ்வாறே செய்தலும், தன்னேடொத்த பருவத்தினராய் மகப்பெற்று வளர்க்கும் மகளிரையழைத்து அவர்களோடு அளவளாவி அறியவேண்டுவன அறிதலும், பிறவும் மேற்கொண்டாளாகலின் இவ்வுவமையும் மகவு வளர்ப்பிற்கு இன்றியமையாது வேண்டப்படுவதாயிற்று.

இனி, "ஒடிவில் செங்கோல் மனுவேந்தன் உலகம் புரக்கும் முறைபோல......வளர்த்தாள்" என்பது மூன்ருவது உவமம்.

கெடுதலில்லாத செவ்விய ஆட்சிநடாத்திய மனு என்னும் பெயர்பெற்ற வேந்தனுகிய சோழர்குல முதல்வன் உலகம் புரக்குமுறைபோல வளர்த்தாள் என்பது இதன் பொருள்.

மனு என்னும் வேந்தன் உலகம் புரக்கும் முறையாக வெளியிட்ட கருத்துக்கள் திருத்தொண்டர் புராணத்துட் செவ்விதிற் கூறப்பட்டுள்ளன. அவை :—

"மாநிலங்காவல் செய்யும் வேந்தன், தன்னுலும் தன்னைச் சார்ந்தவராலும் பகைவராலும் கள்வராலும் பிறவுயிர்களாலும் குடிகளுக்கு அஞ்சத்தக்க தீங்கு நேராமற் காத்து அறத்தை நிலைநாட்டுவோனுதல் வேண்டும்; அதுவே உலகம் புரக்கும் முறை; அவனே மாநிலங் காவலன் ஆவான்" என்பனவாம்.

அவ்வாறே அரசமாதேவியும், தன்னுலும், தன்னைச் சார்ந்தோரான செவிலித்தாயர் ஏவற்சிலதியர் என்னும் இவர்களாலும், தன்னெடு மாறுபட்ட கருத்துடைய பிறராலும், நச்சணுக்கள் முதலிய பிற உயிர்களாலும் அஞ்சத்தக்க நோய் முதலியன நிகழாவண்ணம் பாதுகாத்தும், தெய்வத்தால் நிகழ்வனவற்றைத் தீய நிமித்தங்களால் முன்னரே யறிந்து சாந்தி செய்து போக்கியும் மகவை வளர்த்தாளாகலின் இவ்வுவமையுங் கூறவேண்டுவதாயிற்று.

இன்னும் 'ஒடிவில் செங்கோல் மனுவேந்தன்' என்பதற்கு, மனு என்னும் பெயர்பெற்ற செங்கோல் வேந்தன் என்று பொருள் கோடலேயன்றி, ஆதிமனு வகுத்த நெறி பிறழாமல் செங்கோல் செலுத்தும் வேந்தன் எனவும் பொருள்கொண்டு, அங்ஙனம் ஆட்சிசெய்த வேந்தருள் இரு

வர், உலகம் புரக்கும் முறைபற்றித் தம் சொல்லாலும் செய லாலும்-உலகுக்கு அறிவுறுத்தவற்றையும் ஈண்டு உவமையா கக் கொண்டு பொருள்நயங் காண்டலும் பெருந்துவதாகும்.

சேங்குட்டுவன் என்னும் செங்கோல் வேந்தன் உலகம் புரத்தல் பற்றிக் கூறியவை,

"மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்
பிழையுயி ரெய்திற் பெரும்பே ரச்சம்
குடிபுர வுண்டுங் கொடுங்கோ லஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்பம் அல்லது தொழுதகவு இல்லை"

என்பனவாம். அஃதாவது, 'நாட்டில் பருவமழை பொய்ப் பினும், விளைவு குன்றினும், உயிர்கள் யாதேனும் ஓராற்றால் வருத்தமுறினும் ஆட்சி தவறுடைத்தென உலகம் பழிக் குமேயென அரசன் எப்போதும் அஞ்சவேண்டுவதாயுள் ளது. ஆகலின் அரசர்குடியிற் பிறத்தல் துன்பமல்லது இன் பந்தருந் தகுதிபுடைத்தன்று' என்பதாம். இஃது, அவன் பல்லாண்டுகள் உலகாண்டு கண்டறிந்த உண்மையுரையாக லின் இதனை மறுத்தல் இயலாது. இது போன்று, மோகினி யும், எக்காரணத்தாலேனும் தன் மகவு சிறு வருத்தமுறி னும் அது கண்டு பெரிதும் அஞ்சுதலும், நோய் முதலிய துன்பமின்றி நன்னிலையிலிருக்கும்போதும், அடுத்த இல்லத் திலோ தெருவிலோ ஊரிலோ நாட்டிலோ உள்ள குழந்தை கட்கு இன்னின்ன நோய்கள் உண்டாகின்றன எனப் பிறர் சொல்லக் கேட்பின், தன் மகவுக்கும் அத்தகைய நோய் வந்தணுகுமோ என அன்பின் மிகுதியால் அச்சமுறுதலும், மதலையைப் பெறுநாள் துன்பம், வளர்த்திடு நாளுந் துன் பம்......இங்ஙனம் எற்றைக்குந் துன்பமே யெனின், பெண் ணாகப் பிறந்து மகப் பெற்று வளர்த்தல் இன்பந் தருதல் இல்லைப்போலும், என எப்போதும் அஞ்சுதலும் உடைய ளாகப் பேணி வளர்த்தா ளென்பதும்,

ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் என்னும் செங்கோல் வேந்தன், தனது தீயூழ் வசத்தால் ஆராயாமற் கூறிய சொற்காரணமாகக் கோவலன் கொலையுண்டான் என்பதை யுணர்ந்த அளவில், யானோ அரசன்; யானே கள்வன்; மன்பதை காக்குந் தென்புலங்காவல் என்முதற் பிழைத்தது ஆகலின், செம்மையின் இகந்த இத் தீச்சொல்

எம்மன வேந்தர் செவிப்புலம் படருமுன் வல்வினை வளைத்த கோலை நிமிர்த்துச் செங்கோலாக்குவதற்கு என் உயிர் விடுத்தலே தக்கதெனத் துணிந்து உயிர்விட்டாற்போல, அரசமாதேவியும், மேற்கூறியவாறு எப்போதும் அச்சம் உடையளாய் இருந்தமையோடு, பன்னெடுங்காலஞ் செய்த தவத்தின் பயனாகப் பயந்தெடுத்த இம்மகவு, என் வல்வினையும் உற்று நோக்காமையுங் காரணமாக உயிரிழக்கநேரின் யான் உயிர் வாழேன் என்ற கருத்தும் உடையளாய் வளர்த்தாளென்பதும் இரண்டாவது கொண்ட பொருளாற் பெறப்படும்.

தமிழ்நாட்டு முடியுடைப் பெருவேந்தர் மூவரும் ஒடிவில் செங்கோல் மனுவேந்தராகலின், அவர்கள் சொல்லாலும் செயலாலும் உணர்த்திய உலகம் புரக்குமுறைபோல, மோகினி மகவை வளர்த்தாள் என மூன்றாவது உவமையை விரித்துக் கொள்ளுதல் குற்றமாகாது.

இதுகாறுங் கூறியவற்றால், அரசமாதேவி பிள்ளையால் மிடிபட்டவளாதலின் தான் அரிதிற் பெற்ற மகவை வளர்த்தற்குச் செவிலித்தாயர் பலர் இருப்பினும் அவர்கள் பொறுப்பில் விடாமல், ஊட்டல் ஒலுறுத்தல் முதலிய அனைத்தும் தானே செய்து வளர்த்தாளென்பதும், ஏனைய மகளிர் பெற்று வளர்க்கும் பிள்ளைகளினும் தன் மகவு மேலான வளர்ச்சியுறுதல் வேண்டுமென்னும் நினைவால், தன்னின் மிக்காரும் ஒத்தாருமாகிய பலரோடும் அளவளாவி அறியவேண்டுவன அறிந்து நன்முறையில் வளர்த்தாளென்பதும், அங்ஙனம் வளர்த்துவருங்காலும், தன்னாலும் தன்னைச் சார்ந்தோர் முதலிய பிறராலும் தீங்கு நேராமற் குறிக்கொண்டு காத்தும், எதிர்பாராதவாறு ஏதேனும் தீங்கு நேர்ந்துவிடுமோ என அஞ்சியும், எக்காரணத்தாலேனும் இம்மகவு உயிரிழக்கநேரின் யான் உயிர்வாழேனெனக் கருதியும் வளர்த்தாளென்பதும் பெறப்பட்டன.

இங்ஙனம் அரும்பெறல் மகப்பெற்று வளர்ப்பார்க்கு இயல்பாகத் தோன்றும் எண்ணங்களையும், அவர்கள் மேற்கொள்ளுஞ் செயல்களையும் புலப்படுத்தற்காகவே, மதிநுட்பம் நூலோடுடைய அடிகளார் மூன்று உவமைகளை யெடுத்துக் கூறினர் எனக் கொள்ளுதல் பொருந்தும்.

பாடி வழிபடுதல்

இரா. ஜெயதேவ்

தமிழர்கள் இறைவன் அடி சேர்வதற்கு வழிபட்ட முறைகள் பல வகைகள். அவற்றுள் ஒருசிலர் மெய்ப் பொருளைப் பாடி வழிபடுதலின்மூலமே இறுதியில் வீடு என்னும் பேற்றை அடைய விரும்பினர்கள். இம்முறை சங்ககாலம் தொட்டே நிலவி வந்துள்ளது. அக்காலத்திலும் அதன் பின்னரும் பாணர் என்ற குலத்தினர் யாழின் உதவி யால் பண்பாடி வழிபட்டார்கள். இவர்களுள் மிகச் சிறந்து விளங்கியவர் திருநீலகண்ட யாழ்ப்பாணர். இவர் திருஞான சம்பந்தர் உடன் சென்ற இடம் எல்லாம் உடன் சென்று யாழ் இசைத்துப் பண்கூட்டி வழிபட்டு வீடு பேற்றை அடைந்தார்.

தமிழில் தோன்றிய பாடல்கள் அனைத்தும் அறம் பொருள் இன்பம் வீடு என்று நான்கு வகைகளை உணர்த் தும். அவற்றுள் நான்காவதாக விளங்கும் வீட்டினை அடை யப் பாடியே வழிபடுவோரைக் குறித்து ஒரு சிறிது இங்கு எழுதுவோம்.

பண் இசைத்துப் பாடி வழிபட்டோர் சைவப் பெரு மக்களில் நால்வர்களும், வைணவப் பெரியார்களில் பன் னிருவரும் திகழ்ந்து விளங்கினர்கள். இவர்களில் திரு வாசகம் அருளிய மாணிக்கவாசகரும், திருப்பாவை அருளிய ஆண்டாளும் அவர் அவர் பாடல்களின் வாயி லாக "மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளில்" நீரா டப்போகும் மகளிர் பாவை நோன்பினைப் பூண்டு பாடல் பாடி வழிபட்டுவந்த முறையைச் சிறப்பாகக் கூறியுள்ளார் கள். அன்னார் முறையே திருவெம்பாவை, திருப்பாவை என்ற சிறந்த பனுவல்களைப் பாடி இருக்கின்றனர். அவை கள் மகளிர் மேற்கொள்ளும் வழிபாட்டினை விளக்குவன வாகும்.

திருஞானசம்பந்தர் "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய" தமது தேவாரப் பாடலில் உலகவர்க்கு ஈந்தது யாது எனில் தாளம் என்று குறிக்கப்பட்டிருப்பினும்

" மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப் பன்னி யாதரித் தேத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே " என்றதின் வாயிலாகப் பாடி வழிபடுதலின் சிறப்பு தெற்றென விளங்கும். அவ்வளவில் நில்லாது, " தமிழ் மாலை ஆதரித்திசை கற்றுவல் லார்சொலக் கேட்டுகந்தவர் தம்மை வாதி யாவினை மறுமைக்கும் இம்மைக்கும் வருத்தம் வந்தடையாவே" எனப் பாடியும் வழிபடுதலின் சிறப்பினைக் கூறியுள்ளார். அப்பர் அடிகள் தமது பாடலில் இறைவனை " வாக்கினுள்ளான் வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர் இனத்தகத்தான் " எனவும், " பண்ணுண்ட பாடலோடும் பரமநீ யாடுமாறே " எனவும், " பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகீ " எனவும், " கருத்தனாய்ப் பாடமாட்டேன் காம்பன தோளி பங்கா " எனவரும் பாடலின் அடிகளின் வாயிலாய் வழிபாட்டின் சிறப்பினை உடன் பாட்டிலும் எதிர்மறைப் பொருளிலும் பண்ணிசைத்துள்ளார்கள். அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதியில் இறைவனை நோக்கித் தனக்குப் "பாடும் பணியே பணியாய் அருள்வாய் " என்று விண்ணப்பித்துக்கொள்ளும் முறையிட்டினை உணரலாம். மற்றும் கந்தர் சஷ்டியில் காணும் "உன்னைப் பாட * * * * * பாடினேன் நாடினேன் பரவசமாக " என்னும் கூற்றின் வாயிலாகப் பாடியும் வழிபடுதலின் மூலம் உள்ளொளியைப் பெருக்கி இறைவனை அடைந்தார்கள்.

" என்பூடு கரைந்துருகும் இன்னிசை " என்று பெரிய புராண ஆசிரியர் சேக்கிழார், பாட்டிசையின் நிலையை விளக்கியுள்ளார். பாட்டு இசைத்தால் எப்பேர்ப்பட்ட எஃகு எலும்பையும், உள்ளத்தையும் கரைந்துகொள்ளும். இந்நிலையில் பாடியும் வழிபடுவதால் " உள்ளம் கவர் கள்வனை " அடையப் பெறலாம்.

பாடி வழிபடுதல் என்னவென்று இனி ஆராய்வோம். உலகில் உள்ள அண்டங்கள், கோளங்கள் இவைகளில் முதற்கண் தோன்றியது ஓசை. அவ்வோசை வடிவம் பெற்றுப் பின்னர் மொழியாய்ப் பெருகி, பாடல்களாய் விளங்கியது. இந்தப் பாடல்களை மக்கள் வாயாரப் பாடியும், இறைவனை வாழ்த்தியும் வீடுபேற்றினை அடையப் பெறும்

முறையையே தழுவினர்கள். அதுதான் பாடி வழிபடுதல் எனச் சொல்லப்பெறும்.

தற்கால விஞ்ஞானமுறையின் வாயிலாக இனி அறியப் பெறும் இசையின்பகுதிகளைச் சிறிது இவ்விடத்தில் தெரிந்து கொள்ளவேண்டும். ஒரு இசைக்கருவியின் உதவியால் ஒலியை எழுப்பும்போது, ஒரு ஓசை கிளம்பும். அந்த ஓசை அலைகளாய் மாறிக் காற்றிலே பாவுகின்றது. இனி இரண்டு இசைக் கருவிகளின் உதவியால் ஒலியை எழுப்பும்போது ஓசை அலைகள் இருமடங்காய் வேறுபட்ட ஓசைகளாய் ஒலிக்கின்றன. எனவே இவ்வகையில் பலவகைப்பட்ட இசைக்கருவிகளைக் கொட்டும்போது ஓசை பலவகைப்பட்ட அலைகள் வாயிலாக ஒலிக்கின்றன. ஆனால் அதே சமயத்தில் இரு இசைக் கருவிகள் கொட்டும்போது ஒரே ஓசை அலையை உண்டாக்கும்படியாகவும் செய்யலாம். அதற்குக் கொட்டும் இரு இசைக் கருவிகளின் பான்மையும் ஒன்றாய் இருக்கச் செய்யவேண்டும். ஒரே காலத்தில் கொட்டவும் வேண்டும். இந்நிலையில் இவ்விரு இசைக் கருவிகள் கொட்டவும் வேற்றுமை ஓசை அலைகள் தோன்றா நிலையை எய்தும். இதைப்போன்றே இரு இசைக் கருவிகளுக்குப் பதிலாக, வேற்றுமை ஓசை அலைகள் தோன்றாக் குரல் படைத்த இருவரை அல்லது பலரைக் கூட்டிப் பாட்டிசைத்தால் ஒரே நிலை ஓசை அலை எழும்பும். இம்முறையைக் கையாண்டமேல் நாட்டார் அன்னார் மொழியில் கோரஸ் (Chorus) என அழைப்பார்கள்.

இனி ஒருவர் பாடும்போது எழுப்பும் குரல் தன் உள்ளத்தைத் தொட்டு, தன்னிலையை மறக்கச் செய்து இறைவனிடம் "காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது" என்னும் வாக்கின்படி தன் உள்ளொளியை பெருக்கிச் செயல் ஆற்றும்படி பாடி வழிபடுதலின்மூலம் மெய்ப்பொருளினை அடையும் பெரும் பேற்றினைப் பெறலாம். இந்நிலையும், கர்ம யோகத்தின் மூலம் "கருமமே கண்ணாயினர்" என்று செயல் ஆற்றி இறைவனை அடையப்பெறும் நிலையும், ஒன்றுபடும் எனக் கூறலாம். இவ்வாற்றாற் பாடி வழிபடுதலின் சிறப்பினை தொகுத்துக் கூறலாம் அல்லவா?

திருமுருகாற்றுப்படை சைவ சித்தாந்த விளக்கமே*

வித்துவான் செ. வேங்கடராமச் செட்டியார்

1. தோற்றுவாய்

சிவநேசச் செல்வர்களே !

வணக்கம். பொறிவாயில் ஐந்து அவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறிநின்ற பெரியோர்கள் கூடியுள்ள இப்பேரவையில் சிற்றறிவுடைய சிறியேன் பேசத் துணிவது எனக்கே நகைதருகின்றது. ஆயினும் இத்தகைய பேரவையில் பேசவேண்டும் என்ற ஆர்வம் என்னைப் பிடர் பிடித்து உந்துவதால் பேசத் தொடங்குகின்றேன். என் குற்றங்கள் நீக்கிக் குணம் கொண்டு கோதாட்டுவீர்கள் என்ற நம்பிக்கையோடு தொடங்குகின்றேன்.

" திருமுருகாற்றுப்படை சைவ சித்தாந்த விளக்கமே " என்பது என் பேச்சு. சைவ சித்தாந்த சமாசத்தின் ஐம்பத்தொன்றாவது ஆண்டுவிழா நடைபெறுகின்ற இப் பெண்ணுகடத்தில் கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் அவதரித்தருளிய, பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித மெய்கண்டவராகிய மெய்கண்டதேவ நாயனார் இயற்றியருளிய சிவஞான போதமே சைவ சித்தாந்த சமயத்தைத் தருக்கநெறி வழாது ஆராய்ந்து இலக்கணமுறையில் விளக்கும் சிறந்த முழு முதல் நூல் என்பது யாவரும் அறிந்ததே.

பெருமலை வடிவைத் தன்னுள் அடக்கிக்காட்டும் புல் நுனிப் பனித்துளிபோல அரும் பெருங் கருத்துக்களைத் தன்னுட்கொண்டு அளவிற் சிறியதாய் விளங்குவது அச் சிவஞானபோதம். இறை உயிர் உலகு என்ற முப்பொருள் இயல்புகளை முறையுறத் தெளிக்கும் சமய நூல் அதற்கு முன் தோன்றவில்லை என்பது உண்மையே. ஆயினும் அச் சிவஞானபோதத்துக் கூறப்படுங் கருத்துக்கள் பன்னிருதிருமுறைகளிலும் அவற்றிற்கு முற்பட்ட சங்க நூல்களிலும் இலைமறை காய்போல் காணப்படுகின்ற கருத்துக்களே என்பதை அந்நூல்களை ஆழ்ந்து நோக்குவோர் அறிவர்.

---

*சைவசித்தாந்த மகாசமாச 51-வது ஆண்டுவிழாவில் நிகழ்த்திய சொற்பொழிவு.

அந்நூல்களில் திருமுருகாற்றுப்படை என்பது பொய்யடிமை யில்லாத சங்கப் புலவருள் ஒருவராகிய நக்கீரரால் செய்யப்பட்டது. பத்துப் பாட்டுள் முதற் பாட்டாய் முன்னிற்பது. முருகனையே பதியாகக் கொண்டு போற்றுவது. தன்னை ஓதுவோர்க்கு இருமைப் பயனையும் எய்துவிப்பது. பழுத்த சுவையுடை முழுத்தமிழ்ச் சொற்களால் பத்திச் சுவை நனி சொட்டப் பாடப்பட்டது. விழுமிய நடையும் ஒழுகிய தொடையுமுடையது. பயில்தொறும் பயில் தொறும் நயமிகத் தந்து இன்புறுத்தும் இயல்பினது.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் கடைச் சங்கம் முடிவுற்றது என்பது ஆராய்ச்சியாளர் முடிபாகும். அச்சங்க காலத்து வாழ்ந்த நக்கீரர் இயற்றிய முருகாற்றுப் படையில் சிவஞான போதம் கூறும் சைவசித்தாந்தக் கருத்துக்கள் செறிந்துள்ளன என்பது வியப்பைத் தருவதாயினும் உண்மையாகும் 'இல்லது வாராது' என்ற சற்காரிய முறையைக்கைக்கொள்ளும் நாம், சங்கநூல்கள் முதலிய நூல்களில் இலைமறைகாய் போல் மறைந்திருந்த கருத்துக்களே பிற்காலத்துச் சிவஞான போதமாகத் திருந்திய வடிவில் வெளி வந்தது என்று கொள்வது பொருத்தமுடையதேயாகும்.

இறை, உயிர், கட்டு என்ற முப்பொருள்கள் உண்டு; இறைவன் உலகமாகவும் உலகத்திற்கு வேறாகவும் உலகத் தோடுடனாகவும் இருக்கின்றான்; உயிர், இருட் கேவலநிலை, சகலநிலை, சுத்தநிலை என்ற மூன்று நிலைகளை அடைதற்குரியது. உலகப் பற்றாகிய பாசம் நீங்கினால் உயிர் இறைவனைச் சார்ந்து இன்புற்று உறையும் இயல்பினது என்பன சிவஞான போதம் முதலிய சித்தாந்த நூல்கள் கூறும் சிறந்த உண்மைகளாகும். இந்த உண்மைகளைத் தலைமையாகக் கொண்டு விளக்க எழுந்ததே திருமுருகாற்றுப் படையெனலாம். அப்பாடலை மேலோட்டமாகப் படித்துப் பார்ப்பவர்க்கு இவ்வுண்மைகள் தோன்றுவது அருமை. நோக்கு என்னும் செய்யுள் உறுப்பமையச் செய்யப்பட்ட அப்பாடலை அந்நோக்கு நெறியறிந்து ஆழ்ந்து நோக்குவார்க்கு எளிதில் விளங்கும்.

2. நோக்கு

ஆற்று வெள்ளத்தில் நீந்துவோர், நீர் செல்லும் வழியே செல்வாராயின் அவ்வெள்ளத்தின் வேகம் இவ்வள

வெனச் சரியாக அறிந்து கொள்ள இயலாது. எதிர்த்து நீந்தினல் வெள்ளத்தின் ஆற்றலை உள்ளவாறு நன்குணர முடியும். புலவர் பாடும் பாடலும் அவ்வெள்ளம் போன்றதுதான். பாடல் செல்லும் போக்கில் கருத்தைச் செலுத்திப் படித்தால் அப்பாடலின் உண்மையாற்றல் புலப்படுவதில்லை. பாக்களில் காணப்படும் ஒவ்வொரு சொற்றொடரும் ஒவ்வொரு சொல்லும் என் இங்ஙனம் அமைந்துள்ளன? என்பதை அறிய அவாவி மறித்து நுணுகி நோக்கினல் அப்பாடலின் உண்மையாற்றலும் உயர்வும் நயமும் பெறப்படும். இங்ஙனம் செய்யுளில் உள்ள அடியும் சீரும் மாத்திரையும் ஆகிய உறுப்புக்களைப் படிப்போர் நோக்கியுணருமாறு புலவன் செய்யுள் செய்யவேண்டும் எனவும், இவ்வாறு நோக்கி யுணர வைப்பதுதான், 'நோக்கு' என்று பெயர் பெறும் எனவும், ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனர் கூறியிருக்கின்றார்.

" மாத்திரை முதலா அடிநிலை காறும்
நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே"

(தோல் - செய்யுளியல்)

என்றது காண்க.

இச்சூத்திரத்திற்கு உரை வரைந்த பேராசிரியர் இதன் பொருளை விளக்க, " முல்லை வைந்நுனை தோன்ற வில்லமொடு" (அகநா - 4) என்னும் அகநானூற்றுச் செய்யுளை யெடுத்துக் காட்டி அதன்கண் அமைந்த ஒவ்வொரு சொல்லும் நோக்கி யுணர்வார்க்கு எவ்வாறு சிறந்த பொருளைத் தருகின்றது என்பதைத் தம் பேரறிவு தோன்ற விரித்துள்ளார். அப்பகுதியைப் படித்தபொழுது பேராசிரியர் யோகத்திலிருந்துதான் இப்பொருளை யுணர்ந்தாரோ? என்று எண்ணநேர்ந்தது. அப்பகுதியைப் படித்த பின்னர் பிறசங்கச் செய்யுட்களும் இங்ஙனமே பொருள் நிறைந்தனவாகவும் அப்பொருளை யறியும் அறிவும் ஆற்றலும் இல்லையே என அவ்வப்போது ஏங்குவதுண்டு. ஒருநாள்,

வாக்கிற் கருணகிரி வாதவூரர் கனிவில்
தாக்கிற் றிருஞான சம்பந்தர்—நோக்கிற்கு
நக்கீர தேவர் நயத்திற்குச் சுந்தரனர்
சொற்குறுதிக் கப்பரெனச் சொல்

என்ற வெண்பாவைக் கண்டேன். புலவர் திறங்களை

அளந்தறிந்து சுவைத்த ஒரு பெரும்புலவர் பாடலிது என்பதை யுணர்ந்தேன். தொல்காப்பியரால் சொல்லப்பட்டுப் பேராசிரியரால் விளக்கப்பட்ட "நோக்கு" நக்கீரர் பாடலில் சிறந்து விளங்குவதைக் கண்டே "நோக்கிற்கு நக்கீர தேவர்" என்று இப்புலவர் சிறப்பித்திருக்க வேண்டும் என்பதை யுணர்ந்து நக்கீரர் பாடலில் நோக்கு அமைந்துள்ளமையைக் காண முயன்றேன். நக்கீரர் பாடல் பலவற்றுள்ளும் பத்துப் பாட்டுள்ளும் முதன்மைபெற்று விளங்கும் தகுதி வாய்ந்த திருமுருகாற்றுப்படையையே அவர் சிறந்த வாக்காக எடுத்துக் கொண்டு அதன்கண் 'நோக்கு' அமைந்திருப்பதைத் திருவருள் துணைகொண்டு நோக்கினேன். சிலவுண்மைகள் புலப்பட்டன. இப்பாடலில் உள்ள ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு அசையும் கூட நோக்கி யுணரவல்லார்க்கு நயப்பொருள் பயக்கும் தன்மையன. என் சிற்றறிவிற்கு எட்டிய அளவில் நோக்கி ஆராய்ந்தபொழுது திருமுருகாற்றுப்படையில் சைவ சித்தாந்த உண்மைகளே விளங்கக் கண்டேன். கண்டவற்றை இங்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

3. ஆற்றுப் படுத்துமுறை

எழுத்தும் சொல்லும் பொருளும் இயைபுற ஆய்ந்து முதனூற் பொருளை முற்றுற வுணர்ந்த முதுபெரும் புலவர் ஒருவர், நில்லா உலகம் புல்லிய நெறித்து என உலகியலை உவர்த்துப் பேராவின்பப் பெருவாழ்வை விரும்பி அதை யெளிதில் எய்து நெறியாது என நல்லோர் பலரை நாடி வினவிப் பற்பல விடங்களில் பரந்து திரிகின்றார். ஒருநாள், சேயோன் சேவடிதைவரு சிந்தையும் அவன் புகழ் வழுத்தும் வாயும் அவனை வணங்குந் தலையும் உடைய சீவன் முத்தராம் பெரும்புலவர் ஒருவரை, நல்வினை வயத்தால் ஓரிடத்தில் காண்கின்றார். அப்பெரும்புலவரின் திருமுக ஒளியே முருகன் திருவருளை முழுதுறப் பெற்ற தன்மையை நன்கு விளக்குகின்றது. புலவர் அண்மையிற் செல்கின்றார், வணங்குகின்றார். சேயோன் சேவடிப் பேற்றை எளிதில் எய்தும் நெறி யாதென வினவுகின்றார். அச்சேவடிப் பேற்றை இம்மையிலேயே எய்திய அச்சீவன்முத்தர், அப் புலவருடைய பக்குவ நிலையினையும் அயரா அன்பினையும்

நுனித்துணர்ந்து, முருகன் திருவடிப் பேருகிய வீட்டின் பத்தை யடைதற்குரிய இடங்களையும் அவ்விடங்களில் அம் முருகப்பெருமான் இருக்கும் நிலைகளையும் அப்பெருமானை வழிபடும் அடியவர் நிலைகளையும் வகுத்தும் விரித்தும் கூறி இவ்விடங்களில் யாண்டாயினும் அவ்வாண்டவன் அருளைப் பெறலாம்" என்று செவியறிவுறுத்தி ஆற்றுப்படுத்துகின் றார் செந்தமிழ்ப் புலவராம் சீவன்முத்தர்.

இவ்வாறு வீடுபெற விழைந்த புலவர்க்கு வீடுபெற்ற விழுமியபுலவர் அவ்வீட்டைப் பெறுநெறி தெரிப்பதே திரு முருகாற்றுப்படையென்னும் பெருநெறிப் பாடல் என்க. நிலைபேறில்லாச் செல்வப் பொருளைப்பெறும் பொருட்டுப் புரவலர்பால் இரவலரை யாற்றுப்படுத்தும் பொருநராற்றுப் படை முதலிய பாடல்களிலும், நிலைபேறுடைய பேரின்ப வீடுதரும் திருமுருகப் பெருமான்பால் புலவரை ஆற்றுப் படுத்தும் இம்முருகாற்றுப்படை சிறந்து காட்டுதலின் பத்துப்பாட்டில் முதலிடம் பெற்றது. வீடு விரும்பும் புல வரை முருகன்பால் ஆற்றுப்படுத்தலைக் கூறுவதால் இப் பாடல் " புலவராற்றுப்படை " என்று பெயர் பெறுவதே முறை. புறப்பொருள் வெண்பாமாலையினும் இத்தகைய ஆற்றுப் படைக்குப் ' புலவராற்றுப்படை ' என்றே துறை வகுக்கப்பட்டுளது. ஆயினும் இப்பாடலில் அமைந்த " முருகாற்றுப்படுத்த உருகெழுவியனகர் " (244 - அடி) என்பதிலுள்ள " முருகாற்றுப் படுத்தல் " என்னும் சிறந்த தொடர்மொழியால் " முருகாற்றுப்படை " எனப் பெயர் பெற்றது. " கூத்தராற்றுப்படை " என்று பெயர் பெறு வதற்குரிய பத்துப்பாட்டில் இறுதிப்பாட்டு " மலைபடு கடாம் " என அப்பாடலிலுள்ள சிறந்த தொடர்மொழி காரணமாகப் பெயர்பெற்றிருத்தலும் காண்க.

4. முருகாற்றுப்படை ஆறுவகையாகப் பகுக்கப்பட்டது ஏன்?

முருகனுடைய ஆறுபடை வீடுகளைக் கூறுகின்ற பகுதி களை விளக்கவே அறுவகையாகப் பகுக்கப்பட்டுள்ளது என்பதே பெரும்பாலோர் நம்பிக்கை. படைவீடு என்பது படைகள் தங்கிய இடம் என்னும் பொருளது. கந்தபுரா ணக் கதையை நோக்கும்பொழுது முருகன் திருச்செந் தூரில்தான் படையொடு தங்கியிருந்தான் எனக் கூறப்

பட்டுளது. படைவீடு என்ற பெயருக்கு அத்தலம் தகுதி யுடையதாகலாம். ஏனைத் திருப்பரங்குன்றம் திருவாவினன் குடி திருவேரகம் என்ற தலங்களுக்கு அப்பெயர் பொருந்து வதாயில்லை. குன்றுதோறாடல் ஒருதலமாகாது என்பது வெளிப்படை. பழமுதிர்சோலை மலை என்பது குறிஞ்சிக் கிழவன் என்ற பொருள்பட வந்த மலைகிழவோன் என்ற பெயர்க்குப் பழம் உதிர்சோலை என்பது அடையாக நின்ற தன்றி ஒரு தலத்தைக் குறிக்கவில்லை எனலாம். "சேயோன் மேய மைவரை யுலகம்" எனத் தொல்காப்பியர் மலைகளை முருகனுக்கு உரியவாகக் கூறியிருத்தல் காண்க. மேலும் பழமுதிர் சோலையைக் குறிப்பிடும் பகுதியில் காடுங் காவும் கவின்பெறு துருத்தியும் யாறுங் குளனும் முதலிய பலவாக எண்ணப்பட்ட இடங்களில் எல்லாம் முருகன் இருப்ப தாகக் கூறியுள்ளார். ஆறுபடைவீடு என்ற வரையறைக்கு இவ்விடங்கள் அடங்காமல் போதலையும் ஓர்க. நச்சினார்க் கினியரும், குன்றுதோறாடலையும் பழமுதிர் சோலையையும் தலங்களாக எண்ணவில்லை என்பதையும் நினைக்க. நாவலர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களும் தமது 'நக்கீரர்' என்ற நூலில் ஆறுபடை வீடுகள் என்பது பொருந்தாதென்பதை விளக்கியுள்ளமை காண்க.

ஆறுபடைவீடு என்பது பொருந்தாதாயின் இப்பாடல் அறுவகையாகப் பகுக்கப்பட்டதற்கு வேறு காரணந்தான் யாதோ? என்னின், கூறுவல். இறைவன் ஐம்பூதங்களாக வுள்ளான் என்பதை யுணர்த்தும் தில்லை, காளத்தி, அண்ணா மலை, ஆனைக்கா, காஞ்சி என்னும் ஐந்து தலங்கள் இருத்தல் போல; இறைவன் உலகமாய், வேறாய் உடனாய் நிற்கும் நிலைகளை யுணர்த்தும் தலங்கள் மூன்று உண்டு என்பதைக் காட்டுகின்றன. முருகாற்றுப்படையின் முதல் மூன்று பகுதிகள், பின் மூன்று பகுதிகள், இறைவனை அம்மூவகை நிலையில் வைத்து வழிபடும் அடியவர்களைப் பற்றிக் கூறும் பகுதிகளாகும்.

வீடுபேற்றை விரும்பிய புலவருக்கு அவ்வீடு பெறும் நெறியைக் கூறும் புலவர், முதற்கண் விளக்க வேண்டியது முருகப்பெருமானுடைய இயல்பேயாகும். அவ்விறைவன் இயல்பு; உலகமே யாதலும், வேறாதலும், உலகமோடுட னாதலும் என மூவகையாகவுளது. உலகத்தொடர்பற்றுத்

தனித்திருக்கும் நிலையைப் 'பரநிலை' எனவும் உலகமே உரு வாய் நிற்கும் நிலையைப் 'பருநிலை' எனவும் உலகமும் தானு மாக நிற்கும் நிலையை 'உடனிலை' எனவும் கொள்ளலாம். இம்மூவகைப்பட்ட முருகன் இயல்புகளை யுணர்ந்த புலவர், இம்மூவகை நிலையில் அவ்விறைவனை வழிபட்ட அடியார் இயல்புகளையும் அறிய விரும்புவது இயற்கை. எனவே இறைவனது மூவகையியல்புகளையும் அடியார்களின் மூவகையியல்புகளையும் உணர்த்துகின்ற இப்பாடல் இக்கார ணத்தால் அறுவகையாகப் பகுக்கப்படுகின்றது என்பதே பொருத்தமாகும்.

இறைவனது பரநிலையைத் திருப்பரங் குன்றத்திலும், பருநிலையைத் திருச்சீரலைவாயிலும், அவன் உடனிலையைத் திருவாவிநன்குடியிலும் உணர்த்தி, அவனை அம்மூவகையில் வைத்து வழிபடும் அடியார்கள் மூவகையினரையும் முறையே திருவேரகம், குன்றுதோருடல், பழமுதிர்சோலை என்ற மூன்று பகுதிகளில் வைத்து உணர்த்துகின்றார். வீடு விரும்பும் புலவனுக்கு இங்ஙனம் முறைப்படுத்திக் கூறினால் அவன் தகுதிக்கேற்ப விரும்பிய இடத்தில் அம் முருகனை வழிபட்டு வீடுபெறுவானாக என்பது சீவன்முத்த ராம் செந்தமிழ்ப் புலவரின் நினைவு. தாம் வீடுபெற்ற பின் னர் அவனருளே கண்ணாகக் காண்கின்றார் ஆதலின் அவ் விறைவன் நிலைகளையெல்லாம் எளிதில் அறியப்பெற்றார். அவ் வருள்நிலை அப்புலவனுக்கு இன்னும் எய்தவில்லையாதலின் இவ்வாறு பல்வகை நிலையினையும் பகரவேண்டியதாயிற்று.

5. முருகன் திருவுருவம்

முதற்கண் முருகப்பெருமானது திருவுருவத்தைப் பொதுவகையாற் புலவருக்கு எடுத்துரைக்கின்றார் பெரும் புலவர். செம்மையில் நின்றும் அண்மையிற் செல்வோன் முதலில் காணத்தக்கதாக இருப்பது வடிவத்தின் ஒளியே யாதலின் அதனையே முன்னர் விளக்கியிருக்கின்றார்.

" உலகமுவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
ஓவற விமைக்கும் சேண்விளங் கவிரொளி
யுறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்
செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை
மறுவில் கற்பின் வாணுதல் கணவன் "

என்கின்றார். உலகத்துயிர்கள் உறக்கத்தினின்று எழுந்து மகிழ்ச்சியுறச் செய்வது ஞாயிறு. விண்ணில் விளங்கி வலமாகச் சுழன்றுகொண்டிருப்பது ஞாயிறு. வேறுபட்ட பல சமயத்தவர்களாலும் புகழப்படும் பெருமை வாய்ந்தது ஞாயிறு. அத்தகைய செஞ்ஞாயிறு காலையில் கடலில் தோன்றுங் காட்சி தனிச்சிறப்புடையது. பசுமையான மயில் மேல் செந்நிற ஒளியோடு விளங்கும் முருகப் பெருமானுக்கு அக்கடல் மிசைத்தோன்றும் இளவள ஞாயிறே பொருந்திய உவமையாகும். ஞாயிறு புறவிருளைப் போக்குவதுபோல முருகன் தன்னை வழிபடும் உயிர்களின் அகவிருளைப் போக்குவதாலும், செந்நிறம் இருவர்க்கும் பொதுவாதலானும், நீலப்பறவைக்கு நீலக்கடல் பொருந்திய உவமையாதலானும், ஞாயிறு உலகப் பொருள்களைத் தன்னொளியால் விளக்குதல்போல முருகன் உண்மைப் பொருளை அடியவர்க்கு அறிவிப்பதாலும் சிறந்த உவமையாதல் காண்க. இறைவனுக்கும் ஞாயிற்றுக்கும் இத்தகைய ஒற்றுமையிருத்தலால் மெய்கண்ட தேவநாயனாரும் பலவிடங்களில் இஞ்ஞாயிற்றையே இறைவனுக்கு உவமை கூறியிருக்கின்றார் என்பது உளங்கொளற்குரியது.

> அருக்கன்நேர் நிற்பினும் அல்லிருளே காணார்க்கு
> இருட்கண்ணே பாசத்தார்க் கீசன்—அருட்கண்ணாற்
> பாசத்தை நீக்கும் பகலலர்த்தும் தாமரைபோல்
> நேசத்தில் தன்னுணர்ந்தார் நேர். (சிவஞானபோதம் - 70)

என்ற பாடலைக் காண்க.

இனி அம்முருகனுடைய ஒளி, ஞாயிற்றின் ஒளியைப் போலக் காலம் பாராது எக்காலத்தும் ஒழிவற விளங்கும் சிறப்புடையதாகக் காணப்படுகின்றது. வேறு பொறிகளில் செல்லாது மனத்தைத் தன் வழிப்படுத்தும் தன்மையும் எழிலும் ததும்புகின்றதாம் அவ்வொளியில். இங்ஙனம் சேய்மையில் ஒளிவடிவாகப் பொதுவகையான் கண்ட புலவர், அண்மையிற் சென்று கீழிருந்து மேல் நோக்குவராயின் முதலில் தோன்றுவது திருவடியேயாதலின் அத் திருவடியின் சிறப்பை முன்னர் விளக்கியுள்ளார். மேலும் சேவடி விரும்பிச் செல்லும் புலவர்க்கு முன்னர் அறிவிப்பதற்குரியதும் அதுவே யாதல் காண்க.

இனி, அத்திருவடி, புலவர் எண்ணத்திற்கு ஏற்ற தகுதிப்பாடுடையது என்பதையே விளக்க வேண்டுமாதலின், " உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள் " என்று கூறியுள்ளார். தன்னை அடைந்தவர்கள் தீவினையைப் போக்கி அவரைத் தாங்கும் பொருட்டு அறியாமையை உடைத்தற்குக் காரணமாகிய வலியினையுடைய திருவடி, என்பது பொருள். இதனால் அருளல் கூறினார். இன்னும் சிறிது மேல் நோக்கின் அம்முருகப் பெருமானுடைய கைகள் தோற்றமளிக்குமன்றோ ? அக்கைகள், (செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை) அழித்தற்குரியாரை அழித்த கைகள் எனக்கூறி இறைவனது தெறல் தன்மையை விளக்குகின்றார். அல்லோரை அடக்கி நல்லோரைக் காத்தற் பொருட்டும் அந்த அல்லோரையே நல்லோராக மாற்றுதற் பொருட்டும் ஆகலின் அருளிறைக்குத் தெறலும் வேண்டியதாயிற்று.

கையை நோக்கிய புலவர் அக்கையைச் சார்ந்துள்ள உருவத்தையும் காணுதல் இயற்கையே. அவ்வுருவந்தான் வள்ளிநாயகியார் உருவம். எனவே அவ்வுருவத்தையும் சேர்த்து, " வாணுதல் கணவன் " என்ற பெயரால் குறிப்பிடுகின்றார். அருள்பெற விழையும் புலவர்க்கு அருட்சத்தியோடுகூடிய உருவமே அறிவித்தற்குரிய தகுதியுடையதாதல் காண்க. இங்கு " மறுவில் கற்பின் " என்றதால் வள்ளியம்மையாரின் அக அழகையும் ' வாணுதல் ' என்றதால் அவர் அக அழகால் பொலிவுறும் முக அழகையும் பெறவைத்துள்ளார். முருகனையே நோக்க விரும்பும் புலவன் மீண்டும் அம்முருகனை நோக்குதலே முறையாகலின், அம்முருகனது கடப்ப மாலையணிந்த மார்பினை அறிவிக்கின்றார். அக்கடப்ப மாலை எக்காலத்து எவ்விடத்துப் பூத்தது என்பதும் விளக்கப்படுகின்றது கடலில் நீர்முகந்த மேகம் விண்ணில் பரவிப் பெய்த முதன் மழையிலேயே தண்ணிதாய காட்டில் தழைத்த கடம்ப மரத்தில் பூத்த பூவைக் கொண்டு செய்யப்பட்ட மாலையாம் அது. இக்கடப்பமாலை போகத்திற்குரிய மாலையாகும். மாயடிகளாகிய திருமாலுக்குரிய முல்லை நிலத்தில் பூத்த கடப்பமாலையைப் போகத்திற்குரிய மாலையாகக் கொள்வது எவ்வளவு பொருத்தமாக வுள்ளது காண்மின் ! மாலையை நோக்கிய பின்னர் இன்னும் சிறிது

மேல் நோக்கின் முருகன் சென்னி காணப்படும் அன்றோ? அச்சென்னியில் மிளிர்வது யாது? அதுதான் முருகனுக்கு அடையாளப் பூவாகிய காந்தள்மலர்க்கண்ணி. குறிஞ்சி நிலத்தில் பூத்ததாய்ச் செந்நிறத்ததாய் ஆறு இதழ்களை யுடைய அக்காந்தள் மலர், குறிஞ்சிக் கிழவனுய்ச் செந்நிற மும் ஆறுமுகமும் உடைய முருகனுக்கு அடையாளப் பூவாதல் சாலப்பொருத்தமாதல் காண்க.

> " சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தள்
> பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன் "

என்று காந்தட்கண்ணி அணிந்த சென்னியை அறிவிக்கின்ருர். இவ்வாறு அடிமுதல் முடிகாறும் முருகனுடைய எழிலை அறிவித்த புலவர், முருகனுடைய உறுப்பிற்கு வேருய்க் கையில் விளங்கும் வேற்படையைப் பின்னர் அறிவிக்கின்ருர். அவ்வேலால் செய்த வீரச் செயல்களையும் குறிப்பிட்டு அவ்வேலினை யேந்திய சேயோனைப் புலவர்க்கு அறிமுகப்படுத்தி யிருக்கின்ருர். காணவியலாத பொருளைக் கண்டு காட்டும் புலவர், ஓவியம் வரைந்து காட்டுவதுபோல, முருகப்பெருமானுடைய ஒளியுருவத்தை முன்னர் விளக்கிப் பின்னர்த் திருவடி, திருக்கை, திருமார்பு, திருமுடி ஆகிய அவயவங்களையும் வேலினையும் இயற்கை வழாது எடுத்துக் காட்டிச் செல்வது கால அழகிதாகக் காணப்படுகின்றது. இங்ஙனம் முருகனுடைய திருவுருவத்தைக் கூறுமுகத்தால் தாம் பின்னர் விரித்துக்கூற எண்ணிய அம்முருகப் பெருமானின் மூவகை யியல்புகளையும் குறிப்பில் பெறவைத்துள்ளார். எவ்வாறு எனின்? கூறுவல்.

முருகனுடைய எழிலைப் பொதுவகையான் உணர்த்து வந்த புலவர், " வாணுதல் கணவன், தார்புரளு மார்பினன், கண்ணிமிலைந்த சென்னியன் ஆய செவ்வேற்சேய் " என்று குறிப்பிட்டிருக்கின்ருர். ' வாணுதல் கணவன் ' என்றது, சத்தியும் தானுமாய் இறைவன் இருக்கும் நிலையினைக் குறிப்பிட்டவாறு " சர்வம் சத்திமயம் சகத்து " என்பவாகலின் சத்தியும் தானுமாய் இருக்கின்ருன். எனவே உலகமோடு உடனய் நிற்கும் நிலையினை யுணர்த்திய வாருயிற்று. " மராஅத்துருள் பூந்தண்டார் புரளுமார்பினன் " என உலக போகத்திற்குரிய மாலையணிந்த மார்பினைக் கூறியது தால் உலகமே யுருவாய பருநிலையைக் குறிப்பிட்டவாறு,

"மந்தியு மறியா மரம்பயி லடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தள்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்"

என்றதால் மனத்திற்கெட்டாத பரநிலையைக் குறிப்பான் உணர்த்தியவாறு. காந்தளங்கண்ணி, சுரும்பு மூசாச் சுடர்ப் பூங் காந்தள் எனப்படுவதும், அது உயர்ந்த மலையிலுள்ளது என்பதும், அம்மலைதானும் மந்தியும் அறியா மரம் பயின்றது என்பதும், அப்பரநிலையின் அருமையினை ஒப்புமையான் புலப் படுத்துவதாகும். மேலும் உருவத்தின் மேலிடத்திலிருக்கும் சென்னியைக் குறிப்பிட்டதால் இறைவன் மூவகை நிலை யில் மேலானதாகிய பரநிலையை நன்குணர்த்துதல் காண்க.

கணவன், மார்பினன், சென்னியன் என்ற முப்பெயர் களும், 'செவ்வேற்சேய்' எனப் பின்வரும் பெயர்க்கு அடையாய் அடுக்கி நின்றனவாகலின் இம் மூவகை நிலை யினையும் உடையவன் செவ்வேற் சேயே என்பது பெற வைத்தவாறு. இப்பெயரும் 'செவ்' எனவும், 'வேல்' என வும், 'சேய்' எனவும் பிரிந்து மூன்று சொற்களாகும் தன்மையதாய் அமைந்து அம்மூவகை நிலையினையும் குறிப் பினுள் குறிப்பாய்ப் பெறவைத்த நுட்பம் அறிந்து மகிழ்தற் குரியது. செம்மை பரநிலையினையும் சத்திவேல் பருநிலையினை யும் அவற்றையுடைய சேய் உடனிலையையும் உணர்த்துதல் காணலாம். சேய் என்றது செந்நிறமுடைய முருகன் என்று பொருள்படுஞ் சொல்லாதல் காண்க.

6. சூரர மகளிர்

இனிக் காந்தட்கண்ணியைக் கூறுமுகத்தான் சூரர மகளிரையும், வேலைக் கூறு முகத்தான் பேய்ப் பெண்டினை யும் இயைபுபடுத்திக் கூறியிருக்கும் மாண்பு பெருவியப் பைத் தருவதொன்றாகும். ஒன்றோடொன்று ஒவ்வாது முரண்பட்ட இரண்டு காட்சிகளை ஓரிடத்தில் ஒன்றன்பின் ஒன்றாக எடுத்துக்காட்டி மகிழ்விக்கின்றார். சுரும்பு மூசாச் சுடர்ப் பூங்காந்தள் யாண்டுப் பூத்தது என்பதை அறிவிக்க வந்த புலவர், கோடுவாழ் குரங்கும் ஏறியறியாத உயர்ந்த மரங்கள் நெருங்கிய மலையின் சிறப்பை யறிவித்தார். அம் மலையும் சோலையால் சூழப்பட்டுளது என்பதை விளக்கி, அச்சோலை தானும் சூர்அர மகளிர் ஆடும் சோலை என அறி விக்கின்றார். அச்சூரர மகளிர் எவ்வியல்பினர்? அவர் பாட

லும் ஆடலும் என்ன ? என்பவற்றை இம்முறையால் சங்கிலிபோல ஒன்றற்கொன்று இயைபுடையதாகச் சிறப்பித்திருக்கின்றார்.

தெய்வ மங்கையர், தம்மழகால் கண்டார்க்கு அச்சம் விளைவித்தலின் “ சூர் அரமகளிர் ” எனப்பட்டார். (சூர் - அச்சம். அரமகளிர்-தெய்வமகளிர்.) இவர்களுடைய எழிலை அடிமுதல் முடிவரை ஓவியம் வரைந்து காட்டுவதுபோல் முறை முறையே எழிலுற இயம்புகின்றார். முதலில் ஒண் செஞ் சீறடியைக் காட்டுகின்றார். அடி சிறுத்திருப்பது பெண்டிர்க்கு அழகு ; ஆதலின், ‘சீறடி’ என அரமகளிரின் அழகு மிகுதியை விளக்கினர். அவ்வடிகள் சிறியவாக இருப்பதோடு சிவந்து ஒளியுடையவாய்க் காணப்படுகின்றன. இயற்கை எழில் மிக்க அவ்வடிகளில் செயற்கையழகும் பொலியக் கிண்கிணி அணியப் பெற்றுள்ளன. அடிகளுக்குமேலிருக்கும் கணைக்கால் திரண்டு அழகுடன் விளங்குகின்றது. இடை மென்மையால் நுடங்கி வளைந்து காணப்படுகின்றது. தோள்கள் திரண்டு மூங்கில்போல வனப்பும் வழவழப்பும் உடையவாகக் காணப்படுகின்றன. அவர்கள் உடுத்துக்கொண்டுள்ள ஆடை இந்திர கோபப் பூச்சியைப்போன்று சிவந்து பளபளப்புடன் காணப்படுகின்றது. இவ்வாடைக்கு இவ்வளவு அழகான சிவப்பு நிறம் செயற்கையால் ஊட்டப்பட்டதன்று ; தெய்வத்தின் ஆணையால் இயற்கையாகவே சிவந்திருக்கின்றதாம். பூத்தொழில்கூடச் செய்யப்பெற்றுள்ளதாம். அவ்வாடைக்குள் அல்குற் புறத்தணிந்த பல மணிகளைக் கோத்த மேகலை ஒளியும் ஒலியும் செய்துகொண் டிருக்கின்றது. ஓவியம் வல்லானும் கையால் புனைந்து இயற்றமுடியாத அவ்வளவு அழகு அவர்கட்கு இயற்கையாகவே அமைந்துளது. மானிட மகளிர்க்குத் தாயர் பலரும் கைசெய்வதால் அன்றே அழகு உண்டாவது ? இத்தெய்வ மகளிர்க்கு அங்ஙனமின்றித் தெய்வத்தன்மையால் இயற்கையாகவே பேரழகு அமைந்துளது. இயற்கையான அழகினுக்கு அழகு செய்வார்போலச் சாம்பூநதம் என்னும் உயர்ந்த பொன்னால் செய்யப்பட்ட அழகிய ஒளிவாய்ந்த ஆபரணங்களை அணிந்துள்ளார்கள். அவர்களின் குற்றமற்ற மேனி ஒளி, மிக நெடுந் தொலைவிலும் சென்று விளங்குகின்றது.

அவர்கள் தலையில் அமைந்த கூந்தல், கடையொத்து நெய்ப்புத்தன்மை யுடையதாகக் காணப்படுகின்றது. இங்ஙனம் இயற்கையாக அமைந்த அக்கூந்தலினை அழகுசெய்ய வந்த ஆயமகளிர் 'இக்கூந்தலே கூந்தல் பலவற்றுள்ளும் சிறந்தது' என ஆய்ந்து முடிவுகட்டி யிருக்கின்றார்கள். அவ்வளவு அழகான கூந்தலிலே அத்தெய்வ மங்கையர் தம் செம்மேனிக்கும் செந்நிற ஆடைக்கும் ஏற்றதாகச் சிவந்த காம்பினையுடைய வெட்சியின் சிறிய பூக்களை விடுபூவாக அமைத்துத் தைத்து அப்பூக்கட்கு நடுவே பசுந்தண்டினை யுடைய குவளையினது தூய இதழ்களைக் கிள்ளி யிடுகின்றார்கள். சிதேவி யென்னும் தலைக்கோலத்தையும், வலம்புரி வடிவாகச் செய்த தலைக்கோலத்தையும் வைத்தற்குரிய இடங்களில் வைத்து அழகு செய்கின்றார்கள். திலகம் இட்ட நறுமணம் வீசும் அழகிய நெற்றியில் வந்து தாழுமாறு சுறாமீனின் வாயாகச் செய்த தலைக்கோலத்தைத் தொங்கச் செய்கின்றார்கள். வேண்டிய மணப் பொருள்களைக் கூட்டி முற்ற முடித்த குற்றமற்ற கொண்டையில், பெரிய குளிர்ந்த சண்பகப்பூவைச் செருகுகின்றார்கள். அதன் நடுவில் கரிய புறவிதழையும் துய்யினையுமுடைய மருதப் பூங்கொத்துக்களை இடுகின்றார்கள். அந்த உச்சிக் கொண்டையின் மேல் பச்சென்ற சுரும்புகளினின்றும் மேலே வந்து அழகுபெற்றுத் தோன்றுகின்ற நீர்க்கீழ் நின்று சிவந்த அரும்புகளைக் கொண்டு இணையாகக் கட்டிய மாலையை வளைய வைத்துக் கொள்கின்றார்கள். வளம் வாய்ந்த இரு காதிலும் ஒத்த அளவினவாகத் தொங்கவிட்ட அசோகத்தினது ஒளிவாய்ந்த தளிர்கள், நுட்பமான வேலைப்பாடமைந்த அணிகள் நிறைந்த மார்பில் வந்து அசைகின்றன. திண்ணிய வயிரமான நறுமணமிக்க சந்தனக்கட்டையைத் தேய்த்து உண்டாக்கிய பொலிவுவாய்ந்த நிறத்தினையுடைய சந்தனக் குழம்பைக் கோங்கு அரும்பு போன்று குவிந்துள்ள கொங்கைகளில் அப்பிக்கொள்கின்றார்கள். அக்குழம்பு, மணங் கமழ்கின்ற மருதப்பூவை அப்பினாற்போலக் காணப்படுகின்றது. அக்குழம்பு ஈரம் புலர்வதற்குமுன் விரிந்த வேங்கைப் பூவினது நுண்ணிய மகரந்தப்பொடியை அக்குழம்பிற்குமேல் அழகு பொருந்த அப்பிக் கொள்கின்றார்கள்.

(தொடரும்)

Reg. M. 2330

உ
சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 30 | ஹேவிளம்பி வைகாசி 1957 மே | இதழ் 5

சமயப் பொறை

[ஆசிரியர்]

தமிழ்நாட்டு வரலாற்றில் சமயத்தைப் பொறுத்தமட்டில் அரசனைப் பின்பற்றியே பெரும்பான்மையான குடிகள் சமய ஈடுபாடு கொண்டிருக்கக் காண்கிறோம். அரசனும் அவன் காலத்துச் சமயப் பெரியார்களைப் பின்பற்றி நடப்பான். அவர்களுடைய போதனைகளுக்கு இணங்கச் சமய நிலையங்களையும் உண்டு செய்து பாதுகாத்து வந்தான். பொதுமக்கள் அந்த நிலையங்களைப் போற்றி வரலானார்கள். பல்லவர் காலத்திலும் பாண்டியர் காலத்திலும் மகேந்திரனும் கூன்பாண்டியனும் சமணர்களாக இருந்தார்கள். ஆனால் அப்பர் சுவாமிகளாலும் சம்பந்தர் பெருமானாலும் அம்மன்னர்கள் சைவத்திற்குத் திரும்பப்படப் பொதுமக்களும் சைவர்கள் ஆனார்கள். சோழர்கள் காலத்தில் இராசராசனும் இராசேந்திரனும் பெரிய சிவாலயங்களைக் கட்டி மக்களைச் சைவத்தில் ஈடுபடச் செய்தனர். இராசேந்திரன் சைவக் கோயில்களைக் கட்டினபோதிலும் நாகபட்டினத்தில் புத்தர் கோயிலுக்கு நிலதானம் செய்திருக்கிறான். வைஷ்ணவாலயத்திற்கும் தருமம் செய்திருக்கிறான். ஆகவே அவன் சமயப் பொறை கொண்டவன் என்பர். அப்படிப்பட்டவன் காலத்தில் மக்களும் எந்தச் சமயத்தையும் மேற்கொண்டு வாழலாம். இந்த முறை பல அரசர் காலங்களிலும் இருந்தது.

முகம்மதியர் இந்து நாட்டைப் பிடித்து ஆண்ட காலத்தில் தங்கள் சமயத்தை நாட்டில் புகுத்தத் தொடங்கினர்.

வடநாட்டில் பல வகையிலும் அவர்கள் தங்கள் மதத்தை உட்புகுத்தினர்கள். இந்துக்களின் கோயில்களை இடித்துத் தள்ளியும், ஒத்துக் கொள்ளாதவர்களைக் கத்திக் கிரை ஆக்கியும், தங்கள் மதத்தைத் தழுவினவர்களுக்கு உதவிகள் புரிந்தும் மதப் பரப்பினை மேற்கொண்டார்கள். அப்படியிருந்தும் சில மாகாணங்களைத் தவிர எல்லாப் பாகங்களையும் முகம்மதியம் ஆக்க முடியவில்லை. தென்னிந்தியாவிலோ அனேக நூற்றுண்டுகள் வரை முகம்மதியர்களைத் தெற்கே வரவொட்டாமல் விசய நகரப் பேரரசு இந்துக்களைப் பாதுகாத்து வந்தது. இறுதியில் தலைக்கோட்டைப் போரில் விஜயநகரம் அழிந்து போகப் பின்னரே முகம்மதியர் தெற்கே வந்தார்கள். ஆனல் தமிழ் நாட்டில் கிழக்குப் பகுதியில் ஓரிரண்டு நூற்றுண்டுகள் மட்டும் அவர்கள் ஆட்சி புரிந்தார்களே யன்றிப் பெரும்பாகங்களில் இந்து அரசர்களே ஆட்சி புரிந்தார்கள். அந்தக் காரணத்தினலே முகம்மதிய மதம் தெற்கே பரவவில்லை. அதுபோலவே மராட்டிய நாட்டிலும் கன்னடத்திலும் முகம்மதிய மதம் மிகவாகப் பரவவே யில்லை.

இப்படியிருக்க ஐரோப்பாவிலிருந்து கிறிஸ்து மதத்தினர் இந்தியாவிற்கு முதலில் வாணிபம் செய்ய வந்த பிறகு நாட்டைக் கைப்பற்றி ஆளத் தொடங்கினர். அவர்களோடு கிறிஸ்துவப் பாதிரிமார்களும் இந்தியாவிற்கு வந்து தங்கள் மதத்தைப்பரப்பத் தொடங்கினர்கள். போர்த்துகீசியர் வந்த போது அவர்கள் முகம்மதியர்போலக் குடிகளைப் பலவகைகளில் பலவந்தப்படுத்திக் கிறிஸ்துவர்கள் ஆக்கினர்கள். ஆங்கிலேயர் வந்தபோது அத்தனைப் பலவந்தம் இல்லை. தாழ்ந்த வகுப்பினர்களை மட்டும் பாதிரிமார்கள் கிறிஸ்தவத்திற்குள் புகுத்தினர்கள். மேல்வகுப்பார்களும் படித்தவர்களும் மத மாறுதலுக்கு உட்படவில்லை. ஆங்கில அரசியலாரும் இந்த மாறுதலுக்குத் தகுந்த ஆதரவு தரவில்லை. பாதிரிகள் தங்கள் நாடுகளிலிருந்து பணம் கொண்டுவந்து ஆலயங்களைக் கட்டிப் பள்ளிகளையும் மருத்துவச்சாலைகளையும் ஏற்படுத்திக் கிறிஸ்தவத்தைப் பரப்பினர்கள் என்றுலும் மத மாறுதல் மிக நிதானமாகவே நடைபெற்றது. இருநூறு ஆண்டுகளாகப் பல வகைகளில் மண், பெண், பொன் கொடுத்துப் பார்த்தும் அவர்களின் முயற்சி தக்க பலன் அளிக்கவில்லை.

காரணம் என்னவென்னில் ஏற்கெனவே நாட்டில் தழுவப்பட்டிருந்த இந்து சமயமும் அதன் பல பிரிவுகளும் மிக உயர்ந்த கோட்பாடுகளைக் கொண்டு இருந்ததுவே ஆகும். படித்த மக்கள் புதிதாக வந்துகொண்டு இருக்கும் கிறிஸ்தவத்தில் மேன்மை காணவில்லை. போதிக்கவந்த பாதிரிமார்களும் இந்து சமயக் கொள்கைகளை மறுக்க முடியவில்லை. உதாரணமாக, சைவ சமய நூல்களான திருவாசகம் சிவஞானபோதம் இவைகளைப் படித்து அவற்றில் இருந்த மேன்மைகளை அறிந்து தங்கள் மொழிகளிலே மொழி பெயர்த்தும் கொண்டார்கள். மேலும் அவைகளைப்பற்றி எழுதும் போது எல்லாம் அவைகளை மிக அன்புடனே போற்றியும் வந்தார்கள். ஆகவே படித்த மக்களிடையில் கிறிஸ்தவம் பரவவில்லை. ஆனல் படிப்பும் சமய அறிவும் இல்லாத பாமர மக்களிடமும் காட்டுமக்களிடமும் அவர்கள் பேச்சு ஏறிற்று. அவர்களில் பலபேர் கிறிஸ்தவர்கள் ஆகிவிட்டார்கள். இந்த வகையில் மாறினவர்களும் மிகக் குறைந்த பேர்களே ஆவார்கள். இந்தநிலை ஆங்கிலேயர்கள் நம்மை விட்டுப் போனபோது இருந்தது.

பாரதநாட்டில் தன்னுரிமை வந்தது. நாடு குடியரசு ஆயிற்று. நம்மை நாமே ஆளும் மேன்மை கிடைத்தது. நமக்கு என்று ஒரு அரசியல் திட்டமும் வகுக்கப்பட்டது. அதில் அரசியலுக்கும் சமயங்களுக்கும் தொடர்பு கூடாது என்று வரையப்பட்டது; யார் வேண்டுமானலும் எந்த சமயத்தையும் ஏற்றுக்கொள்ளலாம். அரசியல் அதனைத் தடுக்காது; அரசியல் சமயப் பற்றற்றது என விதித்தார்கள். உடனே சமய உலகத்தில் ஒரு பெரும் மாறுதல் தோன்றிற்று. சுயநலம் பொருந்திய மதப் பித்தர்கள் இது நல்ல சமயம் என்று மகிழ்ந்தார்கள். மேல்நாடுகளிலிருந்து ஆயிரக்கணக்கில் பாதிரிமார்கள் இந்தியாவிற்குள் புகுந்தார்கள். வரும்போது பெரும் பணங்களையும் கொண்டு வந்தார்கள். கோயில்கள் மருத்துவசாலைகள், பள்ளிக்கூடங்கள் முதலியவைகளை ஏற்படுத்தி மக்களைத் தம் சமயத்தில் சேர்க்கத் தொடங்கினர்கள். சமயத்தின் பேராலே செல்வாக்கைப் பெற்று அரசியலிலும் வாலாட்டத் தொடங்குகிறர்கள். இல்லாவிடில் அமெரிக்கர்களுக்கு

இந்தியாவில் கோடிக்கணக்கில் செலவழிக்க என்ன நோக்கம்? கூறவும்வேண்டுமா?

தமிழ்நாட்டில் மேல்நாட்டுப் பாதிரிகளால் மிகுந்த துன்புறுத்தல் செய்ய முடியவில்லை. ஏனெனில் ஏற்கனவே இருந்த சைவ சித்தாந்தம் மிக மேன்மையானது. அதனை ஒரு சிறிதும் அப்பாதிரிகளால் அசைக்கக்கூடவில்லை. ஆனாலும் நமது நாட்டுக் கிறிஸ்தவர்களைக் கொண்டே ஒரு சிறிது மத மாற்றல் பணியைச் செய்து வருகிறார்கள். வாழைப்பழத்தில் ஊசி இறக்குவதைப் போன்ற இரகசிய வேலைகளைச் செய்து வருகிறார்கள். அவ்வேலைகளும் நல்ல பலனைத் தரவில்லை. ஆனால் நடு நாடாகிய மத்தியப் பிரதேசம் வடகிழக்கு நாடாகிய ஆசாம் முதலிய பிரதேசங்களில் அவர்களுடைய வேலை மும்முரமாக நடந்து வருகின்றது. அந்நாடுகளில் தாழ்ந்த வகுப்பார்களும் ஆதிவாசிகளும் மிகவும் உண்டு. அவர்களை மேல் வகுப்பார்கள் கவனிக்கவில்லை. ஆகவே பாதிரிமார்கள் அவர்களுக்குள் புகுந்து, ஆயிரக்கணக்கில் கிறிஸ்தவர்கள் ஆக்குகின்றனர். மத மாற்றத்தினால் மிகுந்த நஷ்டம் இல்லை. அவர்களுடைய நடையுடை பாவனை மனப்போக்கு முதலியவைகளையே மாற்றி விடுகிறார்கள். மதம் மாறின ஆதிவாசிகளில் நாட்டுப் பற்று போய்விடுகிறது. வெளிநாட்டுப் பற்றே புகுகின்றது. ஆகவே பொதுவாக நமது பாரதத்தில் பெரும் பிளவு ஏற்படும். இதனை நாகர் மலைச்சாதிகளில் காண்கிறோம். அவர்களில் ஏற்பட்டிருக்கும் அரசியல் புரட்சி யாரால் தூண்டப்பட்டது என்று கூறவும் வேண்டும். பர்மா நாட்டில் கரேன்களில் ஏற்பட்டிருக்கும் கலகம் போன்றே இந்தப் பிரதேசங்களிலும் ஏற்பட்டிருக்கின்றன.

இந்தச் சங்கடமான நிலையைக் கண்டு சில பெரியோர்கள் மத்தியப் பிரதேசத்துச் சட்டசபையில் வாதித்தார்கள். அதன் காரணமாக ஒரு விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது. அதற்கு ஒரு உயர்நீதிமன்றத்துத் தலைமை நீதிபதியைத் தலைமையாக நியமித்தார்கள். அந்தக் குழு வெகு இடங்களுக்குச் சென்று வெகு மக்களை விசாரித்துக் கணக்கற்ற சாசனங்களைப் பரிசோதித்து ஒரு அறிக்கை வெளியிட்டார்கள். அதிலே வெளிநாட்டுப் பாதிரிமார்கள் செய்து வரும் இரகசிய வேலைகள் வெளியாயின. அவர்கள்

கையாண்ட அநீதி முறைகளும் வெளியாயின. வெளிநாட்டுப் பணங்களின் வருவாய்களும் தெரிந்தன. மக்களில் ஒரே கலவரம் ஏற்பட்டது. வெளிநாட்டு இலஞ்சப்பணம் வரக்கூடாது என்றும், சம்மதமின்றி மதமாற்றம் செய்யக்கூடாதென்றும் முடிவான பல தீர்மானங்கள் அதில் கூறப்பட்டுள்ளன. இந்த அறிக்கையைக் கண்டவுடனே கிறிஸ்து பாதிரிகளுக்கும் அவர்களுடைய சீடர்களுக்கும் பெரும் கோபம் வந்தது. அதனை எதிர்த்துச் சபைகள் கூட்டித் தீர்மானங்களை நிறைவேற்றினார்கள்.

அதில்கண்ட சில குறிப்புக்களை இங்கே தருவாம். 1950 ஜனவரி முதல் 1954 ஜூன் வரையில் இந்தியாவிற்கு வந்த வெளிநாட்டுப் பணம் 29 கோடி 27 லட்சம் ரூபாய்கள். அவைகளின் விவரம் :

அமெரிக்கா	20,68,63,000
கானடா	1,67,56,000
மற்ற ஐரோப்பிய நாடுகள்	1,82,02,000
	24,18,21,000
பிரிட்டன் நாடுகள்	5,09,18,000
	29,27,39,000

உதாரணமாக, விசாரணைக் குழு துஸ்மி என்ற இடத்தில் இருந்தபோது ஒரு நிமிஷத்தில் ஒரு பாதிரிக்கு ஜினீவாவிலிருந்து 60,000 ரூபாயும் அமெரிக்காவிலிருந்து 90,000 ரூபாயும் வந்ததாம். இந்த மாதிரி அனேக பாதிரிகள் கணக்கற்ற தொகைகளைப் பெற்றுச் சமயப் பிரசாரம் செய்துவருகிறார்கள். இந்த வகையில் வெளிநாட்டுப் பணங்களைப் பெற்று வேலை செய்யும் பாதிரிகளில் மத்தியப் பிரதேசத்தில் மட்டும் 480 பாதிரிகள் வேலை செய்கிறார்கள். அவர்களை நாட்டு வரிசையாகக் கூறினால்,

அமெரிக்கா	236
பிரஞ்சு	59
பிரிட்டன்	54
ஸ்வீடன்	32
டச்சு	29

ஜெர்மன்	17
ஸ்விஸ்	16
பெல்ஜியம்	13
ஏனையோர்	24
	480

சிறுசிறு நாடுகளிலிருந்தும் பாதிரிகள் வந்திருக்கிறார்கள். என்னே மத மோகம்!

மத்திய பிரதேசத்தில் மட்டும் 480 பாதிரிமார்கள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி ஆகியிருந்தால் இந்தியா முழுவதிலும் எத்தனை பாதிரிமார்கள் வேலை செய்கிறார்கள். எண்ணிப் பார்க்கவும். நமது தமிழ்நாட்டில் எத்தனை பேர்கள் என்று நாம் நினைத்தும் பார்த்தோமா? எத்தனை பணம் வந்தது என்று கணக்கிட்டோமா? கிணற்றுத் தவளைகளாக நாம் வாழ்கின்றோம். சம்பந்தர் அப்பர் போன்ற பெரியார்கள் இப்போது இருந்தால் இவ்வாறு வாளா இருப்பார்களா?

சில கனவான்கள் நம்மிடையே இருந்துகொண்டு "நாம் ஏழைகள் நமக்குப் பணம் ஏது?" என்கிறார்கள். ஆனால் அவர்களுக்குத் தெரியாமலேயே அந்தப் பாதிரிமார்களுக்குப் பல வகையிலும் உதவிபுரிகிறார்கள். தங்கள் சிறு குழந்தைகளைத் தமது சமய ஞானம் புகட்டாமல் கான்வெண்டுகளுக்குப் பெருமையென்று எண்ணி அனுப்பி வைத்து இளம் உள்ளங்களைக் கெடுத்து வைக்கிறார்கள். இவர்கள் அக் கான்வெண்டுகளுக்குக் கொடுக்கும் அபரிமிதமான பணம் உதவி அல்லவா? நமது நாட்டில் ஒரு பணக்காரர் தமிழ்க் கல்லூரிக்கு ஒரு பைசாவும் கொடுக்காமல் மறுத்துவிட்டு கிறிஸ்து கான்வெண்டுக்கு ரூ. 2500 கொடுத்தார். இந்த வகையில் எத்தனையோ கோடி பணங்கள் பிற மதப் பிரசாரத்திற்கு நாமே கொடுத்து வருகிறோம்.

நன்றாக ஊன்றிப் பார்த்தால் வெளிநாட்டிலிருந்து வரும் பணத்தைக் காட்டிலும் அதிகமாகப் பணம் நமது சமயத்தார்களே மத மாற்றத்திற்குச் செலவழிக்கிறார்கள். இது என்ன பேதைமை! மேலும் நமது சமய உண்மைகளைத் தாமும் அறியாமல் தம் மக்களுக்கும் தாராமல் பிற

மதக் கொள்கைகளை இளமை வயதிலேயே புகட்ட விடுகிறார்கள். இதனால் ஏற்படும் தீங்கு இன்னது என்று இவர்கள் நினைப்பதும் இல்லை.

"மென்கால் சிறையன்னம் வீற்றிருந்த மென்மலரைப்
புன்காகம் கொள்ளத்தான் போனாற் போல்"

நமது செல்வர்கள் தங்கள் மக்களாகிய இளமை உள்ளங்களை பிறநாட்டுக் காகங்கள் பறிக்க விடுகிறார்கள். நாமும் பார்த்துக்கொண்டே விழிக்கின்றோம். என்னே பேதைமை! என்னே அறியாமை! என்னே இழிவு! இந்நிலைமைதான் சமயப் பொறைக்கு இலக்கணமோ?

'அரும்பெறல் மரபிற் பெரும்பெயர்'

(புலவர் - முருகவேள், பி. ஓ. எல்.)

"பெயரில் என்ன இருக்கிறது? 'தாமரை' என வழங்கப் பெறுவதனை, நாம் வேறொரு பெயராற் குறிப்பிடினும், அஃது இனிய நறுமணமே கமழும்" என "ரோமியோவும் ஜூலியத்தும்" என்னும் நாடகத்தில் சேகப்பிரியர் பாடுகின்றார். ஆயினும் சில சில பெயர்களுக்கு ஏதோ ஒரு தனிப்பெருமை இயல்பாக அமைந்து விடுகின்றது!

காந்தியடிகள் இராம்-இரஹீம் என்னும் கடவுட் பெயர்களினிடையில் தாம் எத்தகைய வேறுபாடும் காணவில்லை எனப் பலகாற் கூறி வந்தனராயினும், அவருக்கு இராம நாமத்தில் இயல்பாகவே ஒருவகைப் பற்றுதல் இருந்தது! பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெருமானையே, "சிவன் எனும் நாமம் தனக்கே யுடைய செம்மேனி அம்மான்" எனத் திருநாவுக்கரசர் சிறந்தெடுத் துரைக்கின்றார்; "சிவன் எனும் ஓசை அல்லது உலகில் திருநின்ற செம்மை யுளதே?" எனவும் வியந்து வினவுகின்றார். ஆசிரியர் நக்கீரரோ, முருகனை "அரும்பெறல் மரபிற் பெரும் பெயர் முருக!" எனப் பாடிப் பரவுகின்றார்!

பெயர்களுக்குள்ள பெருமை பெரிது! வினைச்சொற்களை இலக்கண ஆசிரியர்களின் படிமம் (The Grammarians idol) என ஓர் அறிஞர் (P. B. Ballard) குறிப்பிடு

கின்றார். அம்முறை பற்றிக் கூறலுறின், பெயர்ச்சொற்களை இலக்கண ஆசிரியர்களின் தெய்வம் (deity) என்றே கூற லாம். ஒரு மொழியில் பெயர்ச்சொல்லும் வினைச்சொல் லுமே உயிர்ப்புடைய பகுதிகள் (The living elements of language) என்பது மொழிநூலோர் கருத்து. ஆதல் பற்றியே, ஆசிரியர் தொல்காப்பியனார் "சொல்லெனப் படுப பெயரே வினைஎன்று, ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே" என மொழிந்தருளினார். அவர் வினைச்சொற்களினும் பெயர்ச்சொற்களுக்கே முதன்மை தந்துள்ளமை கருதற் பாலது.

ஒவ்வொரு பெயர்க்கும் தனித்தனியே ஒரு குறிப் பிட்ட பண்பு இருப்பதாகப் பழங்கால மக்கள் நம்பி யிருந் தனர். தாம் அடைய விரும்பும் பண்புகளுக்கு ஏற்ற பெயர் களை வைத்துக்கொள்ளும் பழக்கம் இன்றும் மக்களிடையே இருந்து வருகின்றது. ஒருவரின் பெயரை மற்றொருவர் வைத்துக்கொள்வதனால் அவரது பண்புகளைத் தாமும் பெறலாம் என மக்கள் கருதினர். அதனால் பாட்டனின் பெயரைப் பேரனுக்கு வைத்து வழங்கும் பழக்கம் உல கெங்கணும் தொன்றுதொட்டுப் பல மொழியாளரிடையி லும் பயின்று வந்துள்ளதென ஆட்டோ யெஸ்பர்ஸன் என்னும் அறிஞர் விளக்குகின்றார். கடவுளரின் பெயர்களை வைத்து வழங்குவதும் இக் கருத்துப் பற்றியே. சில சில மக்கட் குழு வினருள் தத்தம் தலைவனின் பெயரை மற்றவர்கள் வைத்துக் கொள்ளக்கூடாது எனத் தடைகளும் விதிக்கப்பட்டிருந் தன. தலைவன் மாறுந்தோறும் பெயர்களைப் பற்றிய தடை விதிகளும் அவர்களிடையே மாறிக்கொண்டு செல்லுமாம். பெயர்களுக்கு ஒருவகை மந்திர சக்தி இருப்பதாகப் பழங் கால மக்கள் உறுதியாக நம்பி யிருந்தனர். தம்முடைய பெயரை மற்றவர்கள் தெரிந்துகொண்டால், அதனைக் கொண்டு, தமக்கு ஏதேனும் தீங்கு விளைத்துவிடுவார்கள் என்ற பயம் பண்டைய மக்களுக்கு இருந்தது. "ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லாதே" என்று இன்றும் வழங்கி வருவதை நாம் கேட்கின்றோம்.

ஒருவருக்குப் பெயர் இடுவதிற் பலதிற வகைகள் உண்டு. வறுமையினால் வாடும் பெற்றோர்கள் தம் குழந்தை யாவது வறுமையின் கொடுமையில் இருந்து தப்பி வாழ்தல்

வேண்டும் என விரும்பிச் 'செல்லப்பன்' 'கோடீசுவரன்' எனப் பெயர்கள் வைப்பதுண்டு. இங்ஙனம் வைக்கப்படும் பெயர்கள் அதற்கு மறுதலையாக முடிவதும் இயல்பே. அதனை விளக்குதற்கு இனிய நல்ல எடுத்துக்காட்டு 'உமாயூன்' என்னும் துருக்க அரசனின் பெயராகும். 'உமாயூன்' என்றால் அதிருஷ்டசாலி என்பது பொருள். ஆயின் அவரைப் போன்ற துரதிருஷ்டசாலிகளான அரசர்கள் மிகச் சிலரேயாவர். ஒரு சில பெற்றோர்கள் தம் குழந்தைகளுக்கு நேர்ந்த பிறவிக் குறைபாடுகள் குறித்து வருந்தி அவற்றின் நிறைவை யுணர்த்தும் பெயர்களை வைத்துப் பரிவுடன் வழங்குவர். விழியிற் பழுதடைந்த தமது பிள்ளைக்குக் 'கண்ணப்பன்' எனப் பெயர் வைத்தார் ஒரு சைவத் - தமிழ்த் தந்தையார்! அதிவீரராம பாண்டியன் வரதுங்கராம பாண்டியன் ஆகிய இருவருக்கும் ஆசிரியராகத் திகழ்ந்தவரும், பரங்கிரிப் புராணம் சேதுப்புராணம் பாடியவரும், சிவஞானசித்தியார் சுபக்கம் திருவருட் பயன் என்னும் சைவ சித்தாந்த நூல்களுக்கு உரை வரைந்தவரும் ஆன நிரம்ப அழகிய தேசிகர் இத்தகையதோர் எதிர்மறை இலக்கண முறையில் (Lucus a non lucendo), "நித்த மணாளர் நிரம்ப அழகியர்" என்னும் திருவாசகத் தொடரால் பெயரிடப் பெற்றவரே என்று சான்றோர்கள் கூறுவர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் கல்வியறிவு சிறிதும் பெறாத திண்ணனாரைக் "கலைமலிந்த கண்ணப்பர்" எனவும், கண்ணொளியிழந்தவராய் இருந்த தண்டியடிகளை "நாட்டமிகு தண்டி" எனவும், சூழ்ச்சியினாற் கொலையுண்டு தோல்வி எய்திய மெய்ப்பொருள் வேந்தரை "வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருள்" எனவும் சிறப்பித்துப் போற்றி யிருக்கும் திறமும் ஈண்டைக்கு உணரத் தகுவனவாம்.

செயின்ட் தாமஸ் அக்வினஸ் என்பவர், பொருள்களின் இயற்கைத் தன்மைகட்கு ஏற்பவே அவற்றின் பெயர்கள் இருத்தல் வேண்டும் (The names must be in accordance with the nature of things) என வலியுறுத்திக் கூறுவார். அஃது இந்நாளிற் பெரும்பாலும் பொருந்தி வரவில்லை. ஆயினும் புகழனர், மாதினியார், மருள்நீக்கியார், திலகவதியார் போன்ற பழந்தமிழ்ப் பெயர்கள், அவர்களின்

இயல்பான சிறந்த பண்புகளுக்கு ஏற்ப அமைந்து திகழ்ந்தமை கருதற்பாலது.

மேலும், ஒரு பொருளின் பெயரைத் தெரிந்துகொள்வது, அப்பொருளைப் பெறுதற்கும், அதன்மீது ஆட்சியுரிமை செலுத்துதற்கும் வாய்ப்பளிக்கும் என மனித மனம் முன்னளில் கருதியது. (To know the names of things, in fact, is to hold them in one's power.) பொருள்களின் பெயர்களை அறிந்துகொள்ளும் வேட்கையானது, பொதுவாக இன்றும் எல்லா மக்களிடையிலும் இயற்கையாக அமைந்து கிடப்பதனை நாம் பலதுறைகளிலும் காணலாம். " முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள் " எனவும், "...பிறையாளன் திருநாமம் எனக்கொருகால் பேசாயே " எனவும், " இன்னும் பாடுக பாட்டே! அவர் நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே!" எனவும் தமிழிலக்கியங்களில் வரும் பலப்பல பாடல்கள் இவ்வுண்மைக்குச் சான்று பகரும். ஆர்லண்டோ என்பவன், ரோசலிண்ட் என்னும் தன் காதலியின் பெயரைக் காட்டில் மரங்களிலெல்லாம் செதுக்கிவைத்த (As you like it) கதையை நாம் நன்கறிவோம்.

திருவாரூர்ப் பூங்கோயிலில் " கற்பகத்தின் பூங்கொம்போ! காமன்றன் பெருவாழ்வோ!" எனத் தக்க ஓர் அம்மையாரை நற்பெரும்பான்மை கூட்ட நம்பியாரூரர் காண்கின்றார்; என் மனங்கொண்ட இவ்விளங்கொடிதான் யார்? என வினவுகின்றார்; அதற்கு அன்றங்கு முன் நின்றார் " அவர், நங்கை பரவையார் " எனக் கூறினர். பரவையார் என்னும் பெயரைக் கேட்ட அளவில், நம்பியாரூரர் நனிமிக மகிழ்ந்தார். பரவை—பரவை என அப்பெயரையே பலகாற் சொல்லிச் சொல்லி இன்புற்று, அவ்வம்மையார்பாற் கழிபெருங் காதல் கொண்டார்.

"பேர்பரவை! பெண்மையினிற் பெரும்பரவை விரும்பல்குலார்பரவை! அணிதிகழும் மணிமுறுவல் அரும்பரவை!
சீர்பரவை ஆயினாள்! திருவுருவின் மென்சாயல்
ஏர்பரவை! இடைப்பட்ட என்ஆசை எழுபரவை!"

எனவரும் பெரிய புராணச் செய்யுள், அவர்தம் காதல் மனநிலையைக் கவினுறப் படம் பிடித்துக் காட்டுகின்றது!

இனி, நட்புணர்வின் உரிமை மிகுதியால் நண்பனின் பெயரையே தம் பெயராகக் குறித்துக் கொள்ளும் வியத்தகு செய்தியும்

" இகழ்விலன் இனியன் யாத்த நண்பினன்
புகழ்கெட வரூஉம் பொய்வேண் டலனே !
தன்பொய் ளெக்குங் காலை, ' என்பெயர்
பேதைச் சோழன் !' என்னும் சிறந்த
காதற் கிழமையும் உடையன் !"

என வரும் புறநானூற்று (216)ப் பாடலாற் புலனாகின்றது. இத்தகு நட்பின் அருமைப் பெற்றியினை நினைக்குங்கால், " அண்டமோர் அணுவாம் பெருமை கொண்டு, அணுவோர் அண்டமாம் சிறுமை கொண்டு, அடியேன் உண்ட ஊண் உனக்கு ஆம்வகை எனது உள்ளம் உள்கலந்து எழு பரஞ் சோதி " என்னும் திருவிசைப்பா நம்மனோர் நினைவிற்கு இயைபுபற்றிப் போந்து இன்புறுத்துகின்றதன்றோ ?

சங்க காலப் புலவர்களின் பெயர்க் காரணங்களை ஆராய்ந்தால், பலதிறச் சுவைமிக்க கருத்துக்களை நாம் அறிந்து மகிழலாம். சைவப் பேரறிஞர் சாத்தூர் கந்தசாமி முதலியார் அவர்கள், உயிரின் இலக்கணம் விளக்கும் கருத்துடன், " ஐயூர் மூலங்கிழார் " என்னும் சங்க காலப் புலவரின் பெயரைத் தற்குறிப் பேற்றமாகத் தலைப்பெய்து வழங்கியுள்ளார். அஃதொன்றே அவர்தம் நுண்மாண் நுழைபுலனை விளக்கப் போதியதாகும். இதுபோன்ற சுவைமிகும் வழக்காறுகள் பிறவும் சில உண்டு. அவைகளெல்லாம் அறிஞர்கட்கு ஆராப் பெருவிருந்தாவனவாகும்.

பெயருக்குள்ள இத்தகைய பெருமைகளை யெல்லாம் விளக்குதற்கே, அதனை " அரும்பெறல் மரபிற் பெரும்பெயர் " எனச் சான்றோர் பண்டே அதனைச் சிறப்பித்துரைத்தனர் போலும் ! ஜே. வென்ட்ரியே என்னும் மொழி நூலறிஞர், பெயர்ச்சொற்கள் பற்றி விளக்கிவருங்கால், நோயின் கூறுகளை நுனித்தாய்ந்து அதன் பெயர் இன்னது எனத் தெளிந்து, மருத்துவர் ஒருவர் கூறிவிட வல்லுநராயின், அஃதொன்றே நோயாளியின் அச்சமும் கவலையும்

நீக்கி ஆறுதல் அளித்து நோயைப் போக்கிவிடக்கூடும் என்கின்றார்......(To know the name of the evil is half the cure. Let us not smile at these primitive beliefs. They are still in force today, since we believe in the importance of the diagnosis when it is expressed in words. 'I suffer a great deal with my head, doctor——it is Cephalalgia' 'My digestion is bad——it is dyspepsia!' In actual fact, the doctor is content to substitute for a usual and commonplace word that all his patients understand; they experience relief directly they learn that the specialist knows by name the occult evil that causes their sufferings.) இக்கருத்தை மெய்ப்பிக்க அதர்வ வேதத்திலிருந்து மேற்கோள் ஒன்றையும் அவர் காட்டுகின்றார்.

இஃதொருபுறம் இருப்பச், சில சமயங்களில் நோயாளிகளின் நோய் தணியப் பிறவற்றைக் காட்டிலும், மருத்துவர்களின் பெயர்ப் பெருமையும் சிறந்ததொரு காரணமாக அமைகின்றது என்பதனையும் நாம் பலகாற் கண்டுணர்ந்து வருகின்றோம். அவ்வுண்மையினை ஆசிரியர் சேக்கிழார் பெருமான் ஓரிடத்திற் செவ்விதின் உணர்த்தியருள்கின்றார். பாண்டியன் வெப்புநோய் கண்டு வருந்துகின்றான். சமணர்கள் மருங்கு சூழ்ந்து, நோயின் மூலநெறி அறியாதே, "காவாய் அருகனே! அருகனே" என்றென்றோதி, மருத்துவங்கள் புரிகின்றனர். ஆயினும் நெய்சொரிந்த தழல் போலப் பாண்டியனின் வெப்புநோய் மிகுகின்றதே யன்றித் தணியவில்லை. அதனால் அவர்களை நோக்கி அரசன் "ஒருவரும் இங்கு இருமருங்கும் இராதுபோம்" எனச் சினந்து மொழிந்து உணர்வு சோர்ந்து விழுந்தான். அந்நிலையிற் குலச்சிறையார்,

"காயமும் மனமும் மாசு கழுவுதல் செய்யார் செய்யும்
மாயமும் இந்த நோயை வளர்ப்பதே! வளர்வெண் திங்கள்
மேயவே ணியர்பால் ஞானம் பெற்றவர் விரும்பி நோக்கில்
தீயஇப் பிணியே அன்றிப் பிறவியும் தீரும் என்றார்."

உணர்வு சோர்ந்து உயிர்தடுமாறும் பாண்டியனின் செவிகளில், குலச்சிறையார் சிறந்த ஒரு மருத்துவரின் பெயரை

மெல்லெனச் சொல்லியவுடனே, அதுகேட்ட அளவில் அவன் சோர்வு நீங்கி உணர்வு பெற்றின்புறுகின்றான். நோயின் கொடுமையும் ஓரளவு தணிகின்றது. இந் நிலைமையினை,

"மீனவன் செவியின் ஊடு மெய்யுணர் வளிப்போர் கூற,
ஞானசம் பந்தர் என்னும் நாமமந் திரமும் செல்ல,
ஆனபோ தயர்வு தன்னை அகன்றிட......"

என ஆசிரியர் சேக்கிழார் விளக்கியருள்கின்றார். பாண்டியனின் அயர்வு நீங்கியது; நீங்கியமைக்குக் காரணம் ஞான சம்பந்தர் என்னும் பெயரைக் கூறக் கேட்டமை; கூறக் கேட்ட அளவில் நோயின் கொடுமையை நீக்கியது ஞான சம்பந்தர் என்னும் பெயர்; எனவே, அது வெறும் பெயர் அன்று! தன்னை நினைத்து வழுத்தினாரைக் காக்கவல்லதொரு பெருமந்திரம் அது. இக்கருத்தினை வலியுறுத்தவே "ஞானசம் பந்தர் என்னும் நாம மந்திரம்" எனச் சேக்கிழார் அதனைச் சிறப்பித்துரைக்கின்றார்.

இங்ஙனமே, திருநாவுக்கரசர் நம்பியாரூரர் என்னும் திருப்பெயர்களும் மந்திரச் சிறப்பு வாய்ந்தனவாய்த் தம்மை நினைத்து வழுத்தினாரைக் காக்கும் பேராற்றல் மிக்க பெற்றிமை சான்றவை என்பது உணரற்பாலது. "திருநாவுக்கரசு எனும் ஓர் சொற்றான் எழுதியும் கூறியுமே என்றும் துன்பில் பதம் பெற்றான் ஒரு நம்பி அப்பூதி என்னும் பெருந்தகையே" எனவும், "நாளும் நம்பி ஆரூரர் நாமம் நவின்ற நலத்தாலே ஆளும்படியால் அணிமாதி சித்தியான அணைந்தார்" பெருமிழலைக் குறும்பர் எனவும் சான்றோர்கள் கட்டுரைத் திருத்தல் கடைப்பிடிக்க. இத்துணை அருமை பெருமை வாய்ந்து, தொன்றுதொட்டுச் சான்றோர்களாற் புகழ்ந்து போற்றி ஓதப்பெற்றுவரும் பெயர்களை "அரும்பெறல் மரபிற் பெரும்பெயர்" எனக் குறிப்பிட்டுச் சிறப்பித்துப் போற்றுதல் பொருந்துவதேயாகும் அன்றோ?

கண் கண்ட தெய்வம்

க. தியாகராசன்

இப்பரந்த பூவுலகின்கண்ணே இறைவனை வழிபடுகின்ற முறை இரு பாங்கில் அமைந்துள்ளது. அவற்றுள் ஒன்று உருவ வழிபாடு. ஏனையது அருவ வழிபாடு. உருவ வழிபாடு எளியதும் ஆபத்தில்லாததும் ஆகும். ஆனால் அருவ வழிபாடோ கடினமானதும் ஆபத்து நிறைந்ததும் ஆகும். வழிபாடு என்ற சொல் வழிபடுதல் என்ற வினையின் அடியாகப் பிறந்ததாகும். எனவே வழிபாடு என்ற சொல்லுக்குப் பொருள் வழியிற் செல்லுதல்; அதாவது மெய்யுணர்ந்தோர் காட்டிய நன்னெறியில் ஒழுகுதலே வழிபாடாகும். அந்நெறியில் செல்லுவதால் ஆரா அமுதமாய், தெவிட்டாச் சுவையாய் எவ்விடத்தும் எப்பொழுதும் எக்காலத்தும் மூவாத முழு முதலாய் எல்லாம் வல்ல அருட்பெருஞ் சோதியின் தண்ணருளைப் பெற்று இன்புற்று வாழ ஏதுவாகும்.

உலகம் உய்விக்கத் தோன்றிய அருட்பெரியார் அனைவரும் இறைவனின் திருவருள் நிழலின் கீழ் வாழ்ந்தவரும் வாழ்பவரும் ஆவர். மக்கள் யாவரும் மெய்யடியார் என்பதைத் தெளிவாக அறிந்து இணைந்து வாழ வழிகாட்டுகின்ற பெருமக்கள் நமக்குக் கண்கண்ட தெய்வம் ஆவர்.

பற்றற்றான் பற்றினைப் பற்றி வாழும் முறை பெருவாழ்வாகும். கருவுற்ற நாள் முதலாகப் பிள்ளைப் பருவம் நீங்கும் வரை தாயானவள் தன் சேயைச் சீராட்டி, பாராட்டி, நல்லவனாய் வாழ மிகப் பரிந்து பால் நினைந்தூட்டி வளர்க்கின்றாள். தாயன்புக்கு ஈடு பிறிதொன்றில்லாத அவ்வன்னையும், கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கத்தில் சிறந்து விளங்கிப் பெருவாழ்வு பெற்று நல்வழியில் பிறழாமல் தன் மகனை ஒழுகும்படிச் செய்கின்ற தந்தையும் கண்கண்ட தெய்வமாவார்.

ஔவையாரும் கொன்றைவேந்தனில் 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்றும், 'தாயிற் சிறந்த கோயில் இல்லை' என்றும், 'தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை' என்றும் கூறியவாற்றால் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் கண்

கண்ட தெய்வம் யாவர் என்பதை எளிதில் உணரலா மன்றோ !

தாய் தந்தைமூலம் ஒருவன் பெறும் அறிவைவிடப் பன் மடங்கு தெளிந்த பேரறிவை யாவரும் பெறுவது ஆசிரிய ரிடமே. அவ்வாசிரியரே மாணவரை நல்வழிப்படுத்துகின்ற வரும் உலகறிந்த அனைத்தையும் ஒழியாது உணர்த்துகின்ற வரும் ஆவர். "எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" என்றார் நறுந்தொகை ஆசிரியர். அவரே நித்திய அநித்தியப் பொருள்களின் தன்மையை விளக்கி, அறியாமை மரத்தை வேரறவே வெட்ட அறிவாகிய வாளினை உண்டாக்கு பவரும் ஆவர். அதனால் தோன்றி அழிகின்ற பொருள் களின் நிலையாமையை யுணர்ந்து, அப்பொருளால் அழியாப் பொருளைத் தன்னகத்தே பெற்று வாழும் பகுத்தறிவு அல் லது மெய்யுணர்வினை உடையவர்களாகின்றோம். இப்பெரு நிலையை யாவரும் அடையவேண்டுமானால் ஆசானிடம் நம்பிக்கையும் அவருரைத்த வாசகத்தில் நல்ல நினைப்பும், அப்பயனை அடைய மேற்கொள்ளும் நெறியில் இடைவிடா முயற்சியும்இருந்தால் ஞானமடைந்து இன்புற்றுவாழலாம்.

கண் கண்ட தெய்வமாய் தாய், தந்தை, ஆசிரியர் ஆகிய மூவரும் விளங்குவதை யுணர்ந்தும் பயன் கருதாமல் மிகப் பரிந்து உதவி செய்வதனையுணர்ந்தும் அவர்கள் கூறும் பொருண்மொழிகளைப் போற்றி, பணியாற்றி வந் தால், மனவொருமை ஏற்பட்டு பொய், பொறாமை நீங்கி வாய்மை, தூய்மை யுண்டாகும். அதனால் எங்கும் இன்பமே சூழ எல்லோரும் வாழ ஏதுவாகும்.

முன்னேறுகிறோமா ?

அழகுமதியன்

இக்கேள்வி பொதுவாக உலகமக்களைப் பொறுத்தும் சிறப்பாக ஒரு நாட்டு மக்களைப் பற்றியும் கேட்கப்படுகிறது. இதற்குச் சிலர் உடன்பாட்டிலும் சிலர் எதிர்மறையிலும் விடை சொல்லுகிறார்கள். மகாபாரதம் அக்காலத்து மக்கள்

வரலாறு கூறும் நூல். நம் நாட்டு மக்களுக்குத் தெரிந்த உலகத்தைக் கூறும் நூல். நாடு 56 தேசங்களாகப் பிரிக்கப் பட்டிருந்தது. அவற்றில் சீனு, கம்போடியா, பாரசீகம் முதலியவைகளும் அடங்கி இருந்தபடியால், அக்காலத்தில் அறிந்த உலக வரலாற்றையே அது கூறுவதாகும். அது துவாபர யுகத்தின் சரித்திரம் கூறுவது. அதன் இறுதிப் பகுதியில் துவாபரயுகம் கழிந்துபோய்க் இனி கலியுகம் தொடங்குகிறது. அறம் (தருமம்) மறைந்து மறம் (அதர்மம்) தோன்றும் என்று கூறுகிறது. அக்கொள்கைக்கு உவமை யாக தரும தேவதையான பசுவிற்கு நான்கு கால்கள் உண்டு. முதல் யுகத்தில் அப்பசு நான்கு கால்களால் நடந் தது. இரண்டாம் யுகத்தில் (திரேதாயுகம்) மூன்று கால் களால் நடந்தது. தற்போதைய துவாபர யுகத்தில் இரண்டு கால்களால் நடக்கிறது. இனி வரும் கலியுகத்தில் ஒரு காலால் நொண்டிக்கொண்டு போகும் என்று உவமிக் கிறது. அதற்கு உதாரணமாக இதுவரைக்கும் மக்கள் நீதி நெறியோடு நடந்தார்கள். இனிமேல் நீதி கெட்டு துரா சாரத்தில் நடப்பார்கள் என்று சொல்லி அதில் ஒரு காட்சி யாக ஒரு கணவன் தன் மனைவியைத் தோள்மீது எடுத்துக் கொண்டு தன் தாயைக் காட்டுவழியே நடத்திச் செல்வதா கக் கூறுகிறது. இதனுல் அறியப்படுவது என்னவென்ருல், நீதியுடன் வாழ்ந்த உலகம் கலியுகம் பிறந்தவுடன் நெறி கெட்டுப்போகிறது என்பதாகும். இதுவே புராணக் கோட்பாடு.

அதே புராணங்கள் வேருெரு கொள்கையையும் வெளி யிட்டிருக்கின்றன. சிறப்பாக வைணவ புராணங்கள் அவதாரங்களை எடுத்துக் கூறுகையில் உயிர்களின் வளர்ச்சி நிலையைக் கூறுகின்றன. மீன், ஆமை, பன்றி, நரசிங்கம், வாமனம், மூன்று இராமர்கள், கண்ணன், கல்கி என்ற முறையில் தாழ்ந்த உயிரினிலிருந்து உயர்ந்த உயிர்வரை படிப்படியாக ஏறிச் செல்லும் உயிரினம். இந்த முறை யையே திருவாசகமும் " கல்லாகி மரமாகி......தேவராய் " என்று வளர்ச்சி தத்துவத்தைக் கூறுகிறது. ஆகவே இந்த மண்ணுலகில் உயிரின் பண்பாடு படிப்படியாக முன்னே றிக்கொண்டே செல்லுகிறது. இதே உண்மை என்று மேல் நாட்டாரும் கூர்தல் முறை (Evolution) என்று கூறி

அதனை ஒரு தனி இயலாகவும் வகுத்துப் பெருக்கியிருக்கிறார்கள்.

இந்த இரண்டு கொள்கைகளும் நமது நாட்டில் உலாவி வர எதனை நம் பெரியோர்கள் சான்றுகள் மூலமாக நிரூபிக்கின்றார்கள் என்பதை இனிப் பார்ப்போம் :

முதலில் புராணக் கதைகளில் சில கூறுவோம். சத்திய யுகத்தில் சத்தியமே காட்டப்பட்டதா? அல்லது அந்த நாளில் அசத்தியமும் காட்டப்பட்டதா? சிறிது ஆராய்ந்தால் அரிச்சந்திரன் ஒருவனைத் தவிர வேறு பிரமுகர்கள் உண்மையைக் கடைப்பிடித்தார்களா? விசுவாமித்திரன் செயல்கள் எத்தனை வஞ்சனையைக் காட்டுகின்றன. கொலைகளும் அநியாயத் தீர்ப்புக்களும் கபடம் அறியாத பெண் மணிகள் படும் துன்பங்களும் ஏன் அக்காலத்தில் ஏற்பட்டன. அப்படியாயின் அந்தக் காலம் எவ்வாறு உண்மை யுகம் ஆயிற்று.

இரண்டாவதான திரேதாயுகம் எவ்வாறு விளங்கிற்று? மந்தரை, கைகேயி முதலியோர் வஞ்சனைகளும், தசரதனின் காமத் தன்மையும், அரக்கர்களின் கொடுமைகளும், அரசியலில் மக்களும் அரக்கர்களும் வானரர்களும் காட்டிய பேராசைகளும் தூய்மையான நிலையைக் காட்டுகின்றனவா? தற்காலத்துக் கலியுகத்தில் உள்ள ஆசாபாசங்களைவிட திரேதாயுகம் எந்த நிலையில் சிறந்தது? ஆராய்க.

இனி மூன்றாம் யுகமான துவாபர யுகம் எத்தனை சீர்கேடான நிலையைக் காட்டுகிறது. தாயாதிச் சண்டைகள், கொலைச் சூழ்ச்சிகள், காதல், காமம் இவைகளுக்காகத் திருட்டுகள், சோரங்கள், சகுனி முதலியோரின் வஞ்சனைகள், கெடுதல் தெரிந்துகொண்டும் பெரியவர்கள் அந்தக் கட்சியை ஆதரித்தல், தீ வைத்தல், கொலை புரிதல், கொள்ளையடித்தல், பெண்களைக் கற்பழித்தல், நன்மை ஒழித்துத் தீமையைப் போற்றுதல், நிலத்தின்மீதும் பொன்னின்மீதும் பேராசை கொள்ளல், அதற்காகச் செய்யத்தகாத வஞ்சனைச் சூழ்ச்சிகள் செய்தல் இவைகள் எல்லாம் நிரம்ப இருக்கும். ஆனால் அந்த யுகம் தற்போதைய யுகத்தைவிடச் சிறந்ததா?

மேலும் கலியுகம் மிகக் கொடுமையான யுகம் என்று கூறப்படுகிறது. உண்மையில் இது சரியா? நாட்டில் மக்கட் கல்வி, ஒழுக்கம் இவைகள் எப்போது சிறப்பு அடைந்திருக்கின்றன? மிகச் சிறந்த கவிகளும் புனித மக்களும் சமயாசாரியர்களும் எப்போது தோன்றித் தூய வாழ்வை நிலை நிறுத்தினர்கள்? மிகச் சிறந்த அருங்கலைகளை எப்போது தோற்றுவித்தார்கள். புத்தர், சினர், சூரதுஷ்த்தர், கன்பூசியஸ், ஏசுகிறிஸ்து, முகம்மது முதலியோர்கள் எப்போது தோன்றினர்கள்? ஷேக்ஸ்பியர், தாந்தே, காளிதாசர் முதலிய கவிகள் எப்போது பாடினர்கள்? கலியுகம் எந்தவகையில் முந்திய யுகங்களுக்குத் தாழ்ந்துவிட்டது? ஆராயுங்கள்.

ஆகவே புராணங்களைக் கொண்டே சிறந்த காலத்திலிருந்து தாழ்ந்த காலத்திற்கு உலகம் செல்லுகின்றது என்பதை மறுக்கலாம். அதற்கு மாருகத் தாழ்ந்த நிலையிலிருந்தே நல்ல நிலைக்கு உலகம் செல்லுகிறது என்று நிரூபிக்கலாம். இந்தக் கொள்கையையே அவதாரங்களும் மணிவாசகனர் உறுதிச் சொல்லும் வற்புறுத்துகிறது என்று கூறலாம்.

பிறநாடுகள் மிகத் தாழ்வான நிலையிலிருந்து சென்ற சில நூற்றாண்டுகளில் முன்னேறிவிட்டன. தற்போதும் முன்னேறிக்கொண்டு வருகின்றன. இந்து நாட்டிலும் கல்வி, செல்வாக்கு, தொழிற் சிறப்பு, அரசியல் பேறு இவைகளில் முன்னேறிக்கொண்டே வருகின்றது. அடிமை வாழ்வில் வாழ்ந்த நாமும் தற்போது அந்தத் தளையை விட்டு முன்னேறிவிட்டோம். இனி விரைவில் சகல கலைகளிலும் முன்னேறுவோம்.

தமிழ் நாட்டிலே கலை, சமயம் இரண்டும் சில மக்களிடைதான் பரவியிருந்தது. தற்போது அவைகள் முன்னேறிப் பொதுமக்களிடைப் பரவி வருவதை நன்கு அறிந்துகொண்டு வருகிறோம். சித்தாந்தம் இன்னதென்று அறியாமல் மக்கள் இருந்த காலம் உண்டு. தற்போது சமயப் பிரசாரத்தினல் பொதுமக்கள் தத்துவஞானத்தை அறியத் தொடங்கியிருக்கிருர்கள். ஆகவே நாம் முன்னேறி வருகின்றோம் அல்லவா?

திருமுருகாற்றுப்படை சைவ சித்தாந்த விளக்கமே

வித்துவான் செ. வேங்கடராமச் செட்டியார்

(மலர் - 30 ; இதழ் - 4 ; 128-ம் பக்கத் தொடர்ச்சி)

இங்ஙனமெல்லாம் தம்மை அலங்கரித்துக் கொண்டமையால் பெற்ற பேரழகைப் பிறரெல்லாம் காணுமாறு விளையாடத் தொடங்குகின்றார்கள். அவ்விளையாட்டு எத்தகையது என்னின்? விளாமரத்தின் சிறிய தளிரைக் கிள்ளி ஒருவர்மேல் ஒருவர் அத்தளிர் படுமாறு தெறிப்பதுதான் ! திண்மையான பந்து முதலியவற்றை ஒருவர்மேல் எறிந்தால் அது தப்பாமல் அங்ஙனமே படுதல் எளிது. மெல்லிதாய இவ்விளவின் இளந்தளிர் விரலால் தெறித்தால் தப்பாமல் பிறர்மேல் படுவது என்பது அரிதேயாம். பிறர்மேல் பட்டுழியும் ஒருசிறிதும் துன்புறுத்தாது இன்புறுத்தும். இவ்வரிய விளையாட்டையே அத்தெய்வ மகளிர் தேர்ந்து கொண்டார்கள். அவ்வாறு அவர்கள் தெறித்த அவ்விளந்தளிர், தாம் நினைந்தாங்குப் பிறர்மேல் பட்டவுடன், “முருகனுடைய கோழியோங்கிய வெற்றிக்கொடி நெடிது வாழ்வதாக” என அத்தெய்வ மகளிர் பலரும் ஒருங்கே கூடிக்கொண்டு சிறப்புடன் விளங்கும் மலைப்பக்கமெல்லாம் எதிரொலி எழுமாறு பாடிக்கொண்டு மகிழ்ச்சியால் சோலையில் ஆடுகின்றார்கள்.

அத்தெய்வ மங்கையர் ஆடுதற்கிடமான சோலையால் சூழப்பட்டுளது மலை ; அதன்கண் மந்தியும் ஏறியறியாத அவ்வளவு உயர்ந்த மரங்கள் அடர்ந்திருக்கின்றன. அத்தகைய மலையில் காந்தள் பூத்திருக்கின்றது. அக்காந்தள் முருகனுக்கு உரிமை பூணும் தெய்வத்தன்மை யுடைமையால் அதில் வண்டுகள் மொய்ப்பதேயில்லை. அத்தகைய காந்தள் மலர்கொண்டு கட்டிய பெரிய தண்ணிய கண்ணியைச் சூடிய சென்னியனாக விளங்குகின்றான் முருகன் எனச் சிறப்பிக்கின்றார் புலவர்.

காந்தட் கண்ணியைக் கூறுமுகத்தால் முதுபெரும் புலவர், புலவர்க்குக் காட்டிய இந்த முதற் காட்சியில் அழ

சிற்கே எல்லையாக விளங்கும் ஒளிபுருவங்களைக் காண்கின்றோம். அன்பின் அகலத்தைக் காண்கின்றோம். அத்தெய்வ மகளிர் விரும்புவதும் அணிவதும் எல்லாம் உயர்ந்த நறுமணப் பொருள்களே. அம்மணப் பொருள்களையும் முருகனால் கொடுக்கப்பட்ட மேனி முருகனை விளக்குவதற்காகவே விரும்புகின்றார்கள். தனித்து இன்புறாமல், பலர் திரண்டு ஆடிப்பாடி மகிழ்கின்றார்கள். இதனால் பலரோடும் பகையின்றிப் பயிலும் அன்பின் உயர்வை யுடையவர்கள் அவர்கள் என்பது விளங்கும். விளவின் தளிர்களைக் கிள்ளித் தெறித்த சாலத்தில் தெறிக்கப்பட்டவர்கள் தப்பி ஓட முடியாமையால் தோற்றவர்களே யாயினும், வென்றவர்கள் மகிழ்ந்தாடும் முருகாட்டத்தில் மகிழ்ச்சியுடன் கலந்து கொள்கின்றார்கள். இதனால் அவர்தம் பகையற்ற நகையுள்ளத்தின் தகையினைக் காணலாம். தாம் எறிந்த விளவின் தளிர் பிறர்மேல் தப்பாமல் பட்டது, தம் திறமையால் நிகழ்ந்த செயலே யாயினும் தம் செயல் என்று தருக்கி மகிழாமல் 'அவனன்றி ஓரணுவும் அசையாது ஆதலின்', 'அம் முருகனுடைய அருளே உள்நின்று ஊக்கமளித்தது' என்று எண்ணி அவனுடைய வெற்றிக்கொடியை வாழ்த்திப் பாடுகின்றார்கள். அக்கொடியே முன்பு தம் கணவர்க்கும் தமக்கும் வாழ்வளித்தது என்பதை நன்குணர்ந்தவர்கள் அல்லரோ? தம் செயல் என்பதொன்று இன்றி எல்லாம் இறைவன் செயலே என்று கொள்ளும் கொள்கை யுடையாரே இறைவன் இன்னருளைப் பெறுதற்குரியராவர். "நஞ்செயலற்றிந்த நாமற்ற பின் நாதன் செயல்தானே என்றுந்தீபற, தன்னையே தந்தானென்றுந் தீபற" என்னும் அநுபவ ஞானியின் வாக்கும் காண்க.

விளையாட்டாகத் தெறித்த விளவின்தளிர், பிறர்மேல் பட்ட செயலையே முருகன் செயல் என்று எண்ணும் இச் சூரர மகளிர், தாம் செய்யும் எச்செயலையும் தம் செயலாக எண்ணாமல் அம்முருகன் செயலாகவே எண்ணுவர் என்பது தேற்றம். எனவே அவர்கள் தம் செயலற்றுத் தாம் எனும் தருக்கற்று விளங்கிய தூய ஞானமுடையவர்களே என்பது நன்கு விளங்கும். இவர்களுடைய இவ்வுயர்வு கருதியே புலவரும், இவர்கள் உறுப்புக்களைக் கூறும் வழிப் பாதாதி கேசயாக முறைப்படுத்தி யிருக்கின்றார் என்பதும் நோக்கி

உணர்க. முதலில் இவர்கள் திருவடிகளைக் காண்பவர்களும் உயர்நலம் எய்தலாம் என்பது அவர் கருத்து. மண மிக்க காந்தளங்கண்ணி, மணப்பொருளில் விருப்பமிக்கவரும் முருகன்பால் அயரா அன்புடையவரும் ஆகிய சூரர மகளிர் சார்புடையதாகக் கூறியது சாலப் பொருத்தமுடைய தாகும். இச் சூரர மகளிர் வருணனையால், உயர்ந்தவர்கள் முருகன் திருவருளைப் பெற்று வழிபடும் தன்மை யுணர்த்தி ஞர். அரமகளிர் மனிதரினும் உயர்ந்தோராதல் காண்க.

7. பேய் மகள்

இனி, இச் சூரர மகளிரோடு முற்றிலும் முரண்பட்ட பேய்மகள் காட்சியை உணர்த்துகின்றார். புலவர் கூறக் கருதியது வேற்படையையே யாயினும் புலால் நாறும் அவ் வேற்படைக்கும் புலால் விரும்பும் பேய் மகட்கும் தொடர் பிருத்தலின் உடன் விளக்குகின்றார். "பூமியைச் சூழ்ந்த தண்ணிய கடல் நிலைகுலையும்படி உள்புகுந்து அவுணர் களுடைய நல்ல வலிமை அடங்குமாறு கீழ்நோக்கிக் கவிழ்ந் தலர்ந்த பூங்கொத்துக்களையுடைய மாமரத்தை வெட்டின வேலால், குதிரை முகமும் மனித யாக்கையும் ஆய இரு வகையான உருவினையுடைய ஒரு பெரிய சூரபன்மாவின் உடம்பு அற்று வேறு வேறு ஆம்படி அச்சம் உண்டாக நெருங்கி அவ்வவுணர் தலைவனைக் கொன்ற குற்றமற்ற வெற்றியினையும், ஒருவராலும் அளந்தறிய இயலாத நல்ல புகழினையும் உடைய செவ்வேற் சேய்" என முருகப் பெரு மானுடைய பகைவரை அழிக்கும் ஆற்றலை வேலோடு சேர்த்துப் புகழ்கின்றார் புலவர்.

முருகன் வேலால் சூரபன்மாவைக் கொன்றகாலத்துப் பேய்மகள் அரக்கர் பிணங்களின் நிணமுண்டு செருக்கிப் பாடி ஆடி மகிழ்கின்றாள். அவள் உறுப்புக்களைக் கேசாதி பாதமாகப் புகன்று செல்லுகின்றார் புலவர். அப் பேய்மகள் கூந்தல் எண்ணெய் பூசப்படாமையால் உலர்ந்து பறந்து கொண்டு இடர்கின்றது. அவள் வாய் அங்காந்தபடி யிருக் கின்றது. அதில் பற்கள் நிரல் படலின்றிக் கொட்டியும் மேழியும் கோத்துவைத்தாற் போன்று காணப்படுகின்றன. அவள், கோபத்தால் சுழலும் கருவிழிகளையுடைய பசிய கண்ணால் அச்சமுண்டாகப் பார்க்கின்றாள். அவள் காது

களில் உள்ள பிதுங்கிய கண்ணையுடைய கோட்டானும் பாம்பும் மார்பில் வந்து தொங்குவதால் அவள் பெரிய கொங்கைகளில் தாக்கி வருத்துகின்றன. அவள் உடம்பு வழவழப்பும் பளபளப்பும் இன்றிச் சருக்கரையுடையதாகக் காணப்படுகின்றது. அவள் நடையோ கண்டவர்கள் அஞ்சுமாறு கடுமை மிக்கதாக இருக்கின்றது. இவ்வாறு எல்லாவற்றாலும் கண்டவர் அஞ்சத்தக்க அப்பேய் மகள், முருகன் வெற்றிகொண்ட போர்க்களத்தில் முடைநாற்றமுடைய கரிய தலையைக் கையில் ஏந்திக்கொண்டு குருதி தோய்ந்த கூரிய நகங்களையுடைய வளைந்த விரலாலே, அத்தலையிலுள்ள கண்களைத் தோண்டி யுண்கின்றாள். அசுரர்க்கு அச்சம் உண்டாகுமாறு முருகன் வெற்றிகொண்ட போர்க்களத்தைப் பாடியவண்ணம் தோளை அசைத்துக்கொண்டு நிணத்தைத் தின்றுகொண்டே துணங்கைக் கூத்து ஆடுகின்றாள். பேய்மகள் இங்ஙனம் துணங்கை ஆடுமாறு சூரபன்மாவைக் கொன்ற செவ்வேற் சேய் என்று இயைபு படுத்துகின்றார் புலவர்.

இப் பேய்மகள் உருவம், அருவருக்கத்தக்க உருவம்; அஞ்சத்தக்க உருவம்; அவள் விரும்புவது புலால் நாற்றத்தையே! அவள் பாடுவதும் புலால் வீசும் போர்க்களத்தையேயாம் இப் பேய்மகள் காட்சியோடு சூரர மகளிர் காட்சியை யொப்பிட்டுப் பார்த்தால் இரவுக்கும் பகலுக்கும் உள்ள வேறுபாடு காணப்படும். அரமகளிர் அழகிற்கு எல்லையாக விளங்குகின்றனர். இப் பேய்மகள் கோர உருவிற்கு எல்லையாக விளங்குகின்றாள். அவர்களைக் காண மகிழ்ச்சி பொங்கும்; இவளைக் காண அச்சம் விஞ்சும். அரமகளிர் காதில் அணிந்தது கறிய அசோகந் தளிர்; பேய்மகள் காதில் அணிந்தவை புலால் வீசும் கோட்டானும் பாம்புமேயாம். அரமகளிர் பலராகத் திரண்டு விளையாடி மகிழ்கின்றார்கள்; பேய்மகள் தனித்துப் புலால் உணவால் வயிறு நிரப்பி மகிழ்கின்றாள். அரமகளிர், தாம் தெளித்த தளிர் பிறர்மேற்படச் செய்வது தம் செயலே யாயினும் அது முருகன் அருளால் ஆயிற்றென அவன் கோழிக் கொடியை வாழ்த்துகின்றார்கள். இப் பேய்மகளோ தன் முயற்சி யேதுமின்றி முருகன் தன் வேல் கொண்டு கொன்று குவித்த நிணத்தைத் தின்னும்போதும், அவ்

வேலையோ முருகனையோ வாழ்த்தாது நிணம் கிடந்த களத்தையே பாடுகின்றாள். மகிழ்ச்சியால் ஆடுகின்றாள். இக்காட்சி இரண்டானும் பெரும் புலவர் அறிவிப்பது யாது என்பதை நோக்குவோம்.

இறைவன் எல்லாவுயிர்கட்கும் உள்ளீடாய் நின்று எச்செயலையும் செய்விக்கின்றான் என்றுணர்ந்து வழிபடும் நல்லறிவுடைய மேலோர்க்கும், இறைவன் நினைவேயின்றி வயிறு நிரப்புவதையே பெருநோக்கெனக் கொள்ளும் புல்லறிவுடைய கீழ்கட்கும் ஒப்பவே அருள் செய்கின்றான் என்ற உயர்ந்த கருத்தையே சூரரமகளிர் இயல்பாலும் பேய்மகள் இயல்பாலும் அறிவித்துள்ளார். இறைவன் அருள் செய்வுதில் வேற்றுமை இன்மையும் அவன் அருளுதவியைப் பெறும் ஆன்மாக்களிடையே வேற்றுமை மிகவுண்மையும் காட்டியவாறு. தரை நம்மைத் தாங்குகின்றது என்னும் உணர்ச்சியுடையோரையும் தரையின் உதவியறியாது தாமே திரிவதாக எண்ணும் புல்லரையும் வேறுபடுத்தாது தாங்கும் தரைபோல, இறைவன், தன்னுதவியையறிந்து வழிபடுவோர்க்கும், அறியாது செருக்குவோர்க்கும் ஒப்பவே அருள் செய்கின்றான். அவனருள் உதவியையறிந்து வழிபடுவோர் உயர்ந்தோராதலும், அவனுதவியை அறியாது கண்டதே காட்சியெனக் கருதுவோர் தாழ்ந்தோராதலும் கண்கூடு.

அரமகளிர், உயர்ந்தோங்கிய கோழிக் கொடியை வாழ்த்தலும், பேய்மகள் தான் கண்ட தாழ்ந்து கிடக்கும் புலால் வீசும் போர்க்களத்தைப் பாடுதலும் அவரவர் பெருமை சிறுமைகளை யுணர்த்துதல் காண்க. வேண்டுவார் வேண்டுவனவே ஈவது இறைவன் இயல்பாகலின் சூரரமகளிர் விரும்பிய விளையாட்டு வெற்றியையும், பேய்மகள் விரும்பிய புலாலுணவையும் கொடுத்தருளி, இருதிறத்தாரையும் நிறைவு படுத்துகின்றான். விருப்பம் உயிர்களுக்குள்ள உரிமையே யன்றி இறைவனுரிமை யன்று. விரும்புவதற்குரியன உயிர்கள்; கொடுப்பவன் இறைவன். உயர்வும் தாழ்வும் உயிர்களின் விருப்பத்திற்கேறறவாறு பொருந்தும். சூரரமகளிர் விருப்பம் உயர்ந்த உயிருணர்ச்சியாகிய வெற்றியிலும், பேய்மகள் விருப்பம் தாழ்ந்த உடலுணர்ச்சியாகிய பசி நீங்குதலிலும் இருந்தன என்பதை யோர்க. அர

மகளிர் உயர்ந்தோராதலும் பேய்மகள் இழிந்த பிறப்பினளாதலும் வெளிப்படை. உலகில் உயர்ந்தோர்க்கும் இழிந்தோர்க்கும் எடுத்துக்காட்டாகவே அரமகளிரையும் பேய்மகளையும் கூறினர். அரமகளிர் தொழுதற்குரிய பெருமையுடையவர் என்பதை அறிவிக்க அவர்கள் உறுப்புக்களைப் பாதாதிகேசமாகக் கூறியிருத்தலும், பேய்மகள் அதற்குரியள் அல்லள் என்பதை யறிவிக்க அவளுறுப்பைக் கேசாதிபாதமாகக் கூறியிருத்தலும் காண்க. பேய்மகளடியை விளங்கக் கூறாது, " உருகெழு செலவு " என்று தொழிலால் உணருமாறு கூறியொழிந்தமையும், " கிண்கிணி கவைஇய ஒண்செஞ் சீறடி " எனச் சூரரமகளிர் அடியைச் சிறப்பித்துள்ளமையும் காண்க.

வீடுபெற விழையும் புலவர் செல்லும் வழியில் அரமகளிர் போன்ற உயர்ந்தோரையும், பேய்மகள் போன்ற இழிந்தோரையும் காண்டல் கூடும். காணின் அவ்விருதிறத்தார்க்கும் ஒப்ப அருள் செய்யும் முருகப்பெருமானது அருட்பெருமையை நோக்குவதல்லது, உயிர்களின் பெருமை சிறுமைகளைப் புகழ்ந்தும் இகழ்ந்தும் காலங்கடத்தல் ஆகாது என்பதையும் குறிப்பால் அறிவித்துள்ளார் புலவர் என்பதை நுனித்துணர்க. சூரரமகளிர் வாழ்வின்மூலம் உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாளின் பெருமையையும் சூரபன்மாவின் வீழ்வின்மூலம் செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கையின் பெருமையையும் விவரித்தவாறு நோக்குக.

முருகனுடைய இயல்பை இங்ஙனம் பொதுவகையால் கூறிய சீவன்முத்தராம் பெரும்புலவர், சிறப்பு வகையால் அவன் நிலைகளைக் கூறுமுன் அவன் அருளைப்பெறுவது உறுதி என்பதை யுணர்த்த வேண்டுவது இன்றியமையாததாகும். ஆகவே அதனை முன்னர் அறிவிக்கின்றார்.

" செவ்வேற் சேஎய்
சேவடி படரும் செம்மலுள்ள மொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையும்
செலவுநீ நயந்தனை யாயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத் தின்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே "

என்கின்றார். "நலம்புரி கொள்கைச் செம்மலுள்ளமொடு புலம்பிரிந்துறையும் சேய் சேவடி படரும் செலவு நீ நயந்தனையாயின்" என மாறுக. "நல்வினைகளை முற்பிறப்பில் செய்த கொள்கையுடைமையால் தலைமை அமைந்த உள்ளத்தால், பாசஞானத்தைப் பிரிந்து தங்குவதற்குரிய முருகப் பெருமானுடைய சேவடிக்கண் செல்லும் செலவை நீ விரும்பினையாயின் நல்ல நெஞ்சத்தின் இனிய விருப்பங்கள் பலவும் ஒருங்கே வாய்ப்ப நீ நினைத்த பயனை இப்பொழுதே பெறுவாய்" என்பது பொருள்.

செம்மல் - தலைமை. நல்வினையே செய்துவந்த காரணத்தால் உள்ளம், செம்மல் உள்ளம் எனப்பட்டது. ஒரு கருவிப்பொருளது; 'ஊசியொடு குயின்ற தூசும்பட்டும்' என்புழிப்போல. 'உள்ளத்தால் செலவுநீ நயந்தனையாயின்' என இயைக்க. சேவடிக்கண் செல்லுதல் வேண்டும் என்ற விருப்பம், பல்பிறவியிலும் செய்த புண்ணியத்தானன்றி உண்டாகாதாகலின் 'நலம்புரி கொள்கைச் செம்மலுள்ளத்தால் சேவடி படரும் செலவு நீ நயந்தனையாயின்' என்றார். 'புலம்பிரிந்துறையும் சேவடி எனச் சேவடியின் இயல்பு விளக்கினார். புலம் என்றது பாசஞானத்தை. உயிர், பொறிகளால் சுவையொளியூறு ஓசை நாற்றம் என்ற ஐம்புலங்களை நுகரும் நுகர்ச்சி விருப்பமே பாசமாதலின் அப்பாசத்தைப் 'புலம்' என்ற பெயரால் கூறினார். "அடல்வேண்டும் ஐந்தன்புலத்தை" (343) என்று வள்ளுவரும் கூறுமாறு காண்க.

> "சிறைசெய்ய நின்ற செழும்புனலின் உள்ளம்
> சிறைசெய் புலனுணர்விற் றீர்ந்து"
>
> (சிவஞானபோத - வெ - 51)

என மெய்கண்டாரும் பாசஞானத்தைப் 'புலனுணர்வு' எனக் கூறியது காண்க.

உலகப் பற்றினைப் பற்றாது சேவடியடைய எண்ணிய காரணத்தால் நெஞ்சம், 'நன்னர் நெஞ்சம்' எனப்பட்டது. பற்றற்றான் பற்றினைப் பற்றும் நசையாதலின் 'இன்னசை' எனச் சிறப்பிக்கப்பட்டது. 'விரையார் மலர்தூவிப் பூண்டு இடப்பதென்று கொல்லோ' எனவும், "அமுதின் சுவையைப் புல்லிப் புணர்வதென்று கொல்லோ" எனவும்,

" பணிந்து பாதப் பூப்போதணைவ தென்று கொல்லோ " (திருவா – புணர்ச்சிப்பத்து) எனவும் அடியார்க்குத் தோன்றும் இன்னசை பலவாதலின் 'இன்னசை பலவுடன் வாய்ப்ப' என்றார். 'முன்னிய வினை' என்புழி 'வினை' ஆகுபெயராய்ப் பயனை உணர்த்தி நின்றது. சீவன் முத்தராம் பெரும் புலவர் கூறிய வழியில் சென்று வழிபட்டால் சேவடிப் பேற்றைப் பெறுவது உறுதியாகலின் 'இன்னே பெறுதி' எனத் துணிந்து கூறினர். சேவடி சேர நினைந்து வினவிய புலவரின் பக்குவநிலையை யறிந்து கூறியதாகும்.

புலம் பிரிந்துறையும் சேய் சேவடி என்றமையால், சேயோனாகிய இறையைப் பாசமணுகா தென்பதும், 'புலம் பிரிந்து' என்றமையால் 'பாசம்' உண்டு என்பதும் அப்பாசத்தோடு கூடிய உயிர் அதனைப் பிரிந்தாலன்றிச் சேவடி சேர முடியாதென்பதும் 'புலம் கெட்டு' என்னாது 'புலம் பிரிந்து' என்றமையால் பாசம் நித்தியம் என்பதும் முத்தியிலும் மும்முதலுண்டு என்பதும் விளங்குதல் காண்க. இக்கருத்துக்கள் யாவும் சைவ சித்தாந்தத் தெளிவே என்பதைக் கூறவும் வேண்டுமோ ?

இங்ஙனம் கூறக் கேட்ட வீடு விரும்பின புலவன், அப்பரமன் யாண்டு யாண்டு உளன் ? அவன் இயல்புகள் என்னை ? அவனை வழிபடும் முறை யாது? என வினவ அவாவுதல் இயல்பாதலின் அம்முருகப் பெருமான் இனிதுறையும் இடங்களையும் அவ்விடங்களோடு சேர்த்து அவன் நிலைகளையும் அவனை அந்நிலைகளில் வைத்து வழிபடும் அடியவர் வழிபாட்டு முறைகளையும் உணர்த்தத் தொடங்கி முதற்கண் திருப்பரங்குன்றத்து முருகன், உலகத்திற்கு வேறாய் நிற்கும் பரநிலையை அறிவிக்கின்றார்.

8. திருப்பரங்குன்றம்

திருப்பரங்குன்றத்தைத் தெரிவிக்க வந்த புலவர், துங்கச் செந்தமிழ்ச் சங்கம் நிலைபெற்றிருந்த சிறப்பானும், ஈண்டிய புகழுடைய பாண்டியன் ஆண்டிருந்தாண்டுவரும் பெருமையாலும் எல்லோராலும் நன்கறியப்படுவது மாடமலிந்த மதுரையே யாதலின் அதனை முற்கூறி அதன் மேற்றிசையில் உள்ளது திருப்பரங்குன்றம் என்று கூறியுள்

ளார். பாண்டியன் போரை விரும்பிச் செய்து வெற்றி பெற்று எடுத்துக்கட்டிய நீண்ட கொடிகள், வானளாவிய மதுரை மாநகர்க் கோபுரத்தில் அசைந்தாடிக் கொண்டிருக்கின்றன. இன்னும் சிறிது அணுகி நோக்கினால், வரிந்து புனைந்த பந்தும் பாவையும் அக்கோபுர வாயிலில் தொங்கிக் கொண்டிருக்கின்றன. கொடிகள் கட்டுவது வெற்றிக்கு அறிகுறி என்பர்; இப்பந்தும் பாவையும் தொங்கவிட்டிருப்பது எதற்கு என்பதைக் காண்போர் உய்த்துணர வேண்டியுளது. பாண்டியன், எதிர்த்துவரும் மன்னர்களை மடவார் போல வலியிலராகக் கருதுகின்றமை தோன்ற அவர்கள் விளையாடவெனப் பந்தும் பாவையும் தொங்கவிட்டிருக்கின்றான். பந்தும் பாவையும் கொண்டு ஆடுதல் மடவார் செயல். அம்மன்னர்கள் அவ்விளையாட்டிற்கே யுரியர் என இழிவுபடுத்தியவாறு. இப்பந்தும் பாவையும் கண்டவுடன் பாண்டியன் வலிமை யுணர்ந்து போர் செய்ய வருவோர் இலராயினர். எனவே அவ்வாயில் போரில்லாத அமைதி மிக்க வாயிலாக விளங்குகின்றது. அவ்வாயிலின் உள் நுழைந்து பார்த்தால் பல்பொருள் நிறைந்த செல்வக் கடைத்தெரு காணப்படுகின்றது. அதன் செல்வ நிலையை நோக்குவார்க்குச் செல்வத்திற்குரிய திருமகளே அங்கு வந்து வீற்றிருக்கின்றாள் என்றுதான் தோன்றும். இத்தகைய கடைத் தெருவைக் கடந்து சென்றால், மாடங்கள் நிறைந்த பெரிய தெருக்கள் காட்சியளிக்கின்றன. இவற்றையெல்லாம் காணுங்கால் அங்கு வாழும் மக்கள் வீரமிக்க செங்கோல் வேந்தனாகிய பாண்டியனால் பகையின்றிப் பசியின்றி மகிழ்ந்து வாழ்கின்றார்கள் என்பது விளங்குகின்றது.

இத்தகைய பெருமை வாய்ந்த மதுரைக்கு மேற்றிசையில் விளங்குகின்றது திருப்பரங்குன்றம். அக்குன்றத்தின் அருகே கரிய சேற்றினையுடைய அகலமான வயல்கள் காணப்படுகின்றன. அவ்வயலில், முள் நெருங்கியுள்ள தண்டினையுடைய, வாய் விரிந்து மலர்ந்த தாமரை மலர்கள் காட்சியளிக்கின்றன. அம்மலரில் வண்டுகள் மாலைக் காலத்துத் தங்குகின்றன. இரவு வந்தவுடன் அத்தாமரை மலர்கள் குவிந்துவிடுகின்றன. வண்டுகள் வெளிவர வியலாது அம்மலரினுள் உறங்கிவிடுகின்றன. சிறிது ஒளியுடைய

வைகறைக் காலம் வருகின்றது ; குவிந்த மலர் சிறிது விரிகின்றது; உறங்கிய வண்டுகள் விழித்து வழி காண்கின்றன; பறக்கின்றன. அண்மையில் தேன் பொருந்திய நெய்தல் மலரைக் காண்கின்றன. குவியும் நிலையிலுள்ள அம்மலரில் ஊதித் தேன் அருந்துகின்றன. ஆனால் தமக்கு வேண்டிய அளவு தேன் கிடைக்கப் பெறவில்லை. அந்நிலையில் பகலவன் தோன்றிவிடுகின்றான். எங்கும் ஒளிமயமாக விளங்குகின்றது. குறைபடு தேன் அருந்திய வண்டுகள் உயரப் பறக்கின்றன. திருப்பரங்குன்றத்தின் உச்சிக்குச் செல்கின்றன. அங்கு அழகிய சுனை காணப்படுகின்றது. அதில் கண் போல் மலர்ந்த அழகிய தாமரை மலர்கள் காணப்படுகின்றன. அம்மலர்களில் தங்கி இன்ப மகிழ்ச்சியால் அகஞ்சிறையையுடைய அவ்வண்டுகள் ஆரவாரிக்கின்றன. அவ்வண்டுகளின் ஆரவாரத்திற்கு இடமாக விளங்குகின்றது பரங்குன்று. அப்பரங்குன்றத்தில் முருகப்பெருமான் மனம் விரும்பித் தங்குதற்குரியன் என்று உணர்த்தினர் பெரும் புலவர்.

திருப்பரங்குன்றத்திற்கு அடையாக வண்டுகளின் செயல்களையே கூறியுள்ளார். முருகன் இயல்பு யாதும் கூறவில்லை. வண்டுகள், வயலில் உள்ள தாமரையில் இரவில் உறங்குகின்றன. வைகறையில் விழித்து நெய்தல் மலரில் உள்ள குறைபடு தேனை விரும்பிப் பருகுகின்றன. விடிந்த பின் உயரப் பறந்து சென்று மலையுச்சியிலுள்ள சுனை மலரில் தங்கி இன்ப ஒலி எழுப்புகின்றன. " உறங்கின ; நுகர்ந்தன; ஒலிக்கின்றன " என்று சுருக்கமாகக் கூறலாம். முருகப்பெருமான் விரும்பித் தங்கும் திருப்பரங்குன்றத்திற்கு இவ்வண்டுகளின் செயலைக்கொண்டு புலவர் உணர்த்தக் கருதியே சிறந்த பொருள் வேறு உண்டு என்பது இப்பகுதியைக் கூர்ந்து நோக்கும் கூர்த்த மதியினர்க்கு நன்கு விளங்கும்.

முன்னேரே தோற்றுவாய் செய்துள்ளபடி இறைவனுடைய மூவகை யியல்புகளில் உலகத் தொடர்பின்றித் தனித்து நிற்கும் பரநிலை யுடையனை முருகன் திருப்பரங்குன்றத்தில் வீற்றிருக்கும் தன்மையை யுணர்த்துவதே புலவர் உட்கோளாதலின் அதற்கேற்பவே இவ்வண்டின் செயலை அடையாகக் கூறியிருக்கின்றார். பின்வரும் திருச்

சீரலைவாயில் அறுமுகமும் பன்னிருகையும் உடைய முருகன் உருவத்தைக் கூறும் புலவர், இங்கு முருகன் உருவ நிலையைப் பற்றி யாதும் கூறாது "அமர்ந்துறைதலும் உரியன்" என்று மட்டும் கூறியிருத்தல் காண்க. இதனால் தத்துவங் கடந்து நிற்கும் அருவநிலையாகிய பரநிலையை யுணர்த்தினார் என்பது பெறப்படும். பின்னர், "ஆலவாய்ச் சேரலும், ஆவிநன்குடி யசைதலு முரியன்" என்று கூறுபவர், இங்குக் "குன்றமர்ந் துறைதலு முரியன்" என, 'அமர்ந்து' என்னும் அடையைச் சிறப்பாகப் புணர்த்தியுள்ளார். அமர்தல் விரும்புதல். இதனால் ஏனைய இடங்களினும் திருப்பரங்குன்றத்தில் முருகன் தங்குதற்கேற்ற தகுதி மிகுதியாக அமைந்திருத்தல் வேண்டும் என்பது புலப்படும். அச்சிறப்புதானும் தன் சிறப்பியல்பாகிய தத்துவங் கடந்த பரநிலைக்குத் தக்கவாறு அமைந்திருத்தல் வேண்டும். அத்தகைய சிறப்புத் திருப்பரங்குன்றத்திற்குப் புணர்த்திய அடையால் புலப்படுகின்றதா என்பதை நோக்குவோம்.

ஆன்மாக்களுக்குக் கேவல நிலை, சகலநிலை, சுத்த நிலை என்ற மூன்று நிலையுண்டு என்பது சைவ சித்தாந்தக் கொள்கை. கேவல நிலை என்பது ஆன்மா, மலங்களோடு மாயையில் ஒடுங்கி அறிவின்றிக் கிடக்கும்நிலை. இதனை 'இருட் கேவலம்' என்றும் கூறுவர். 'சகலநிலை' என்பது, அவ்வான்மாக்களிடத்தில் வைத்த கருணையால் இறையருள் தநுகரண புவன போகங்களை யுண்டாக்கித்தர அவற்றைப் பெற்று அவ்வான்மாக்கள், சிறிது அறிவு தெளியப் பெற்று உலக போகங்களை நுகர்ந்து பிறந்திறந்துழலும் நிலை. 'சுத்த நிலை' என்பது, சகலத்தில் பெற்ற சிற்றறிவைப் பெருக்கித் தம்மையும் தம்முடைய தலைவனையும் உணர்ந்து மலமாசு கழிந்து பேரறிவுப் பொருளாகிய இறைவன் திருவடிகளில் இரண்டறக் கலந்து இன்புறும் நிலை. இது அருட் கேவலம் எனவும் கூறப்படும்.

திருப்பரங்குன்றத்திற்கு அடையாகப் புணர்த்த 'வண்டின் அரிக்கணம' என்றது ஆன்மாக்களை யுணர்த்தியது. "அவ்வண்டுகள் கரிய சேற்றில் வளர்ந்த தாமரை மலரில் இரவெல்லாம் உறங்கிக் கிடந்தன" என்றது, அவ்வான்மாக்கள், இருட்கேவல நிலையில் மாயையில் கட்டுண்டு அறிவு விளக்கமின்றி ஒடுங்கிக்கிடந்த நிலையை யுணர்த்தி

யது. வைகறைக் காலம் என்பது ஞாயிற்றினொளி சிறிது விளங்கும் காலத்தையே யாகும். வைகறைக் காலத்தில் வண்டுகள் நெய்தல் மலருக்குச் செல்லவேண்டுமாயின் இரவெல்லாம் வண்டுகளையுள்ளடக்கி மூடியிருந்த தாமரை மலர் சிறிதேனும் விரிதல் வேண்டும். இல்லையேல் வண்டுகள் தாமரையிலிருந்து புறம்போதல் இயலாது. தாமரையைச் சிறிதலர்த்திச் சிறிது ஒளியுண்டாக்குவது, வைகறையில் புலப்பட்டுத் தோன்றாத ஞாயிற்றின் செயலாகும்.

'ஞாயிறு, வைகறையில் தன் கதிர்களைச் சிறிதே தோற்றி இருளைச் சிறிது நீக்கித் தாமரையைச் சிறிதலர்த்தி வண்டுகட்கு விடுதலைதந்து கட்கமழ் நெய்தலைக் காட்டியது என்றது, இறைவன், தன் கருணையால் இருட்கேவல நிலையில் அறிவு மயங்கிக் கிடந்த ஆன்மாக்களை மாயையினின் றும் எடுத்து, உடம்பு முதலியவற்றை அவ்வான்மாக்களுக் குக் கொடுத்துச் சிறிது அறிவு விளங்கச் செய்தான் என் பதை யுணர்த்தியது. வண்டுகள், வைகறையில் நெய்தல் மலரிலிருந்த சிறிய தேனை நுகர்ந்தன என்றது, ஆன்மாக் கள், இறைவன் தந்த உடம்போடு தோன்றி அவன் காட் டிய போகத்தைத் துய்த்துக்கொண்டு உழன்றமையை யுணர்த்தும். இது, இருட்கேவல நிலையின் நீங்கிய ஆன்மாக் களின் சகலநிலை ஆகும்.

ஞாயிறு தோன்றிப் பகற்காலம் உண்டாகி எங்கும் விளக்கமடைந்தவுடன் நிலப்பரப்பிலுள்ள நீரில் மலர்ந்த நெய்தல் மலரிலுள்ள தினைத்தனை யுள்ளதோர் பூவினில் தேனையுண்டு கொண்டிராமல் வண்டுகள், பறந்து மலையுச் சிக்குச் சென்று அங்குள்ள சுனைமலரில் தங்கி இன்புற்று ஒலித்தன என்றது, ஆன்மாக்கள், இருவினைப் பயனாகிய போகம் நுகர்ந்து முடிந்தவுடன் இறைவன் தோன்றி மேல் நெறியெலாம் புலப்படுத்தியதையும், இறைவன் புலப்படுத் திய நெறியே சென்று சுத்தநிலை யடைந்து அவ் ஆன்மாக் கள், நினைத்தொறும் காண்டொறும் பேசுந்தோறும் எப் போதும் ஆனந்தத் தேன் சொரியும் செம்பொருளோடு இரண்டறக் கலந்து இன்புற்று மகிழும் நிலையையும் புலப் படுத்தும். இது சுத்த நிலை.

" பொன்வாள்முன் கொண்மூவில் புக்கொடுங்கிப் போயகலத்
தன்வாளே எங்குமாம் தன்மைபோல்—முன்வாள்
மலத்துள் மறைந்துள்ள மற்றுலகை யுண்ணும்
மலத்திரித்துச் செல்லும் வரத்து " (சி. ஞா. போ. 73)

என மெய்கண்டார், ஆன்மாக்களின் மூவகை நிலையினை யுணர்த்தி யிருத்தல் காண்க. இங்கு ஆன்மாவிற்குச் சூரியனை யுவமையாக்கியுள்ளார். நக்கீரர், முதலில் முருகனுக்குவமையாக ஞாயிற்றைக் கூறியதற்கேற்ப, ஈண்டும் இறைவனுக்குவமையாகவே கொண்டு வண்டுகளை ஆன்மாக்களுக்கு உவமையாக்கி யிருத்தல் பொருத்தமாகத் தோன்றுகின்றது.

" இருஞ்சேற் றகல்வயல் விரிந்து வாயவிழ்ந்த
முட்டாட் டாமரை துஞ்சி வைகறைக்
கட்கமழ் நெய்த லூதி எற்படக்
கண்போல் மலர்ந்த காமரு சுனைமலர்
அஞ்சிறை வண்டின் அரிக்கண மொலிக்கும்
குன்றமர்ந் துறைதலும் உரியன் "

என்பது காண்க. இங்ஙனம் இருட்கேவலத்திருந்த ஆன்மாக்கள் இறையருள் உதவியால் சகலநிலை யடைந்து பின் அச்சகல நிலையில் நீங்கிச் சுத்த நிலையை யடைந்து மகிழ்கின்றன. இத்தகைய சுத்தான்மாக்கள் சூழத் திருப்பரங்குன்றத்தில் முருகன், உயர்ந்த தன் பரநிலையில் விளங்குகின்றான் என்பதை விளக்கியவாறு. சகல ஆன்மாக்கள் நிறைந்த உலகத்தைக் கடந்து விளங்குகின்ற இறைவன், சுத்த ஆன்மாக்கள் சூழ இருப்பதற்கு விரும்புதல் இயற்கையே யாதலின், 'அமர்ந்துறைதலும் உரியன்' எனச் சிறப்பித்தார் என்க.

அகப் பாட்டுக்களில், தலைவன் இயல்புகளைத் தோழியும் தலைவியும் வெளிப்படக் கூறாது அவன் நாட்டுக் கருப்பொருள்களைக் கூறி அவற்றின்மூலம் வெளிப்பட வைப்பது மாபு. இதற்கு 'உள்ளுறையுவமம்' என்று பெயர். கடவுள் வாழ்த்து ஆகிய இம் முருகாற்றுப்படை புறம் எனப்படும். புறப் பாட்டுக்களில் இவ்வாறு உவமையைக் கூறி உவமே

யத்தைப் பெறவைப்பது 'ஒட்டணி' எனப்படும். கருத்துடை யடைகொளியணி என்று கூறுவதுமுண்டு. புலவர், தாமுரைத்த இத்தகைய நுண்பொருளை யுணரும் ஆற்றல் உள்ளவனே தம் சொன்னெறியே சென்று செந்நெறி சேர்வான் என்பது கருதியே வெளிப்படக் கூருது இவ் வாறு உவமை முகத்தால் பெறவைத்தாராதல் வேண்டும். இறைவனுடைய ஏழுவகை யியல்புகளில் முதன்மையதாய தானேயாம் பரநிலையை முதற்கண் உணர்த்தி யிருப்பதும் அப்பரநிலையில் முருகன் வீற்றிருத்தற்கு இடமாதல் பற்றிக் குன்றம் 'பரங்குன்றம்' எனப்படுவதும் பொருத்தமுடைத் தாதல் காண்க.

9. திருச்சீரலைவாய்

இனி, இரண்டாவதாகக் கூறுவது இறைவன் உலக மாய் நிற்கும் பருநிலையை. இந்நிலை, திருச்சீரலைவாயில் காணப்படுகின்றது. திருப்பரங்குன்றத்தில் அருவாய்க் கூறப்பட்ட முருகப்பெருமான் உருவத் திருமேனி தாங்கி அறுமுகமும் பன்னிருகையும் தொழில் செய்ய யானைமேற் கொண்டு திருச்சீரலைவாய்க்குச் செல்லுதலும் உரியன் என்பது இப்பகுதியின் சுருக்கம்.

முருகப்பெருமான் ஏறியுள்ள யானை எத்தகையது என்பதை முன்னர் உணர்த்துகின்ருர் புலவர். கூரிய நுனியையுடைய அங்குசம் தாக்கியதால் உண்டாகிய வடுக்கள் நெற்றியில் ஆழ்ந்து காணப்படுகின்றன. உயர்ந்த இனத்து யானை என்பதை யுணர்த்தும் புள்ளிகளும் அந் நெற்றியில் விளங்குகின்றன. வாடாத பொன்னரி மாலை முகத்தில் தொங்கவிடப்பட்டிருக்கின்றது. அது, யானை செல்லுங்கால் நெற்றிப் பட்டத்தொடுங் கிடந்து அழகாக அசைகின்றது. அவ் யானையின் இருமருங்கும் உள்ள மணிகள் மாறி மாறி ஓசையை யெழுப்புகின்றன. அவ் யானை இயல்பாகவே விரைந்து செல்லும் நடையை யுடையது. யமனைப்போலப் பிறரால் தடுத்தற்கரிய வலியை யுடையது. செல்லத் தொடங்கினல் காற்று எழுந்து செல்வதுபோன்று விரைந்து நடக்கும் இயல்பினது. அத்தகைய உயர்ந்த யானை யின்மேல் ஏறிக்கொண்டான் முருகப்பெருமான்.

(தொடரும்)